




புதுகை
# வரலாறு நாளிதழ்

WWW.VARALARUU.COM VARALARUU PUDUGAIVARALARU VARALARUU 7502051351








ஞாயிறு ❖ பிப்ரவரி. 19, 2023 | சென்னை & புதுக்கோட்டை | 4 பக்கம் ❖ வரலாறு 8 ❖ இதழ் 136 ❖ ரூ.10


## மோசடி பத்திரப் பதிவுகளை ரத்து செய்யும் அதிகாரம்

# ஐகோர்ட் பாராட்டு

### உயர் நீதிமன்ற யோசனைப்படி, நாட்டிலேயே முதல் முறையாக போலி பத்திரப் பதிவுகளை ரத்து செய்யும் அதிகாரத்தை வழங்கி சட்டத்திருத்தம் ; நீதிபதி

சென்னை , பிப்.19-

மோசடி பத்திரப் பதிவுகளைத் தடுக்க நாட்டில் முதல் முறையாக தமிழ்நாடு அரசு போலி பத்திரப் பதிவுகளை ரத்து செய்யும் அதிகாரத்தை மாவட்ட அதிகாரிகளுக்கு வழங்கி சட்டத்திருத்தம் கொண்டு வந்துள்ளதாக சென்னை உயர் நீதிமன்றம் பாராட்டு தெரிவித்துள்ளது.



சென்னை சோழிங்கநல்லூரை அடுத்த ஒக்கியம் துரைப்பாக்கத்தில் சலபதி என்பவருக்கு சொந்தமாக 2,400 சதுர அடி வீட்டுமனை உள்ளது. இந்நிலையில், கடந்த 2017ம் ஆண்டு ஜனவரி மாதம் அவர் இறந்த நிலையில், ஏழு மாதங்களுக்கு பிறகு போலியாக பொது அதிகார பத்திரம் தயாரித்து அந்த நிலத்தை தனியாருக்கு விற்பனை செய்துள்ளனர்.

இந்த விவகாரம், சலபதியின் வாரிசுகளுக்கு தெரிய வந்தது. இதனையடுத்து சென்னை தெற்கு மாவட்ட பதிவாளரிடம் அவர்கள் புகார் அளித்தனர். இதற்கிடையில் போலி பத்திரப் பதிவு குறித்து புகார் வந்தால் அதை விசாரித்து, போலியென கண்டறிந்தால் அந்த பத்திரப் பதிவை ரத்து செய்ய மாவட்ட பதிவாளருக்கு அதிகாரம் வழங்கி சட்டத்திருத்தம் கொண்டு வரப்பட்டது.

கடந்த 2022ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் முதல் அமலுக்கு வந்த இந்த சட்டத்திருத்தத்தின்படி, சலபதியின் வாரிசுகள் மீண்டும்புகார் அளித்தனர். அதன்மீது நடவடிக்கை எடுக்கப்படவில்லை. இதையடுத்துபோலிபொது அதிகார பத்திரத்தின் அடிப்படையில் பதிவு செய்யப்பட்ட பத்திரத்தை ரத்து செய்ய உத்தரவிடக்கோரி சலபதியின் மகன் சுதாகரராவ் சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தார்.

இந்த வழக்கு நீதிபதி சுரேஷ்குமார் முன் விசாரணைக்கு வந்தது. அப்போது தமிழக அரசுத்தரப்பில், "மனுதாரர் முதலில் அளித்த புகாரின் அடிப்படையில் விசாரணைதுவங்கப்பட்டு விட்டது. மேலும், சட்டத் திருத்தத்துக்கு பின் அளித்த இரண்டாவது புகாரின்படி, விசாரணை நடத்தி உரிய காலத்தில் முடிவெடுக்கப்படும்" என தெரிவிக்கப்பட்டது.

இதையடுத்து, சொத்துக்கள் மோசடியாக எப்படி அபகரிக்கப்படுகின்றன என்பதற்கு இந்த வழக்கு ஓர் உதாரணம் எனக் குறிப்பிட்ட நீதிபதி, இதுபோன்ற செயல்களை தடுக்க உயர் நீதிமன்ற யோசனைப்படி, நாட்டிலேயே முதல் முறையாக தமிழ்நாடு அரசு, போலி பத்திரப் பதிவுகளை ரத்து செய்யும் அதிகாரத்தை மாவட்ட அதிகாரிகளுக்கு வழங்கி சட்டத்திருத்தம் கொண்டு வந்துள்ளதாக பாராட்டு தெரிவித்தார்.

மேலும், மனுதாரரின் புகார் குறித்து விசாரித்து எட்டு வாரங்களில் முடிவெடுக்கவேண்டும்என மாவட்ட பதிவாளருக்கு உத்தரவிட்டு, வழக்கை முடித்து வைத்தார்.




புதுடெல்லியில் விஞ்ஞான் பவனில் 49 ஆவது சரக்கு மற்றும் சேவை வரி குழு கூட்டம் ஒன்றிய அரசின் நிதித்துறை அமைச்சர் நிர்மலா சீதாராமன் தலைமையில் நேற்று நடைபெற்றது. இக்கூட்டத்தில் தமிழ்நாடு அரசின் நிதித்துறை மற்றும் மனிதவள மேம்பாட்டு துறை அமைச்சர் பழனிவேல் தியாகராஜன், கூடுதல் தலைமைச் செயலாளர் முருகானந்தம், வணிகவரித்துறை ஆணையர் தீரஜ்குமார் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## எல்லோருக்கும் எல்லாம் என்ற அடிப்படையில் திட்டங்களை வகுத்து செயல்பட்டு வருவதாக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பேச்சு

சென்னை பிப்.19-

நகரமயமாதலில் தமிழ்நாடு முன்னிலை மாநிலமாக உள்ளதாக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பேசினார்.

சென்னை, நந்தம்பாக்கத்தில் வீடு, மனை விற்பனை கண்காட்சியை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் நேற்று தொடங்கி வைத்தார். இதையடுத்து அவர் பேசியதாவது, தமிழகத்தில் தொழில் நிறுவனங்களை வரவேற்கும் வகையில் உட்கட்டமைப்புகள் அரசு மேம்படுத்தப்படுகிறது. தமிழகத்தில் புதிய தொழில் கொள்கைகளையும் அரசு வெளியிட்டு வருகிறது. அந்த வகையில் ரியல் எஸ்டேட் தொழில்நுட்ப திட்டம் இன்று (நேற்று) தொடங்கப்பட்டுள்ளது.




தமிழ்நாட்டின் வளர்ச்சிப்பாதை என்பது எல்லோருக்குமான வளர்ச்சியாக அமைய வேண்டும் என்பதே தமிழக அரசின் நோக்கம். அந்த வகையில் மக்கள் அனைவருக்கும் பெற வேண்டிய வீட்டு வசதியை கிராம மற்றும் நகர்ப்புற திட்டங்களை நிறைவேற்றி வருகிறோம். குடிசையில்லா நகரங்களை உருவாக்க குடிசைமாற்றுவாரியத்தை இந்தியாவிலேயே முதல் முறையாகஉருவாக்கியவர் கலைஞர் கருணாநிதி.

அவர் அமைத்த பாதையில் தான் நம் மாநிலம் பெருமிதத்தோடு வளர்ந்து வருகிறது. பிற மாநிலங்களுக்கு முன்மாதிரியாகதமிழ்நாடு திகழ்வதாகபாராட்டுகள் குவிந்து வருகின்றன. தமிழ்நாட்டின் மொத்த மக்கள் தொகையில் 49 சதவீதம் மக்கள் நகர்ப்புறங்களில் வசித்து வருகின்றனர். இந்த சூழலில் நாட்டிலேயே நகரமயமாதலில் தமிழ்நாடு முன்னிலை மாநிலமாக உள்ளது. எல்லோருக்கும் எல்லாம் என்ற அடிப்படையில் நாங்கள் திட்டங்களை வகுத்து செயல்பட்டு வருகிறோம். குறிப்பாக நகரங்கள் - கிராமப்புறங்களுக்கு இடையே தொடர்புகளை ஏற்படுத்தி வருகிறோம். புதிய துணைக்கோள் நகரங்கள் உருவாக்கவும் திட்டமிட்டுள்ளோம். இதனால் வரும் ஆண்டுகளில் ரியல் எஸ்டேட் துறையில் பெரிய மாற்றங்கள் ஏற்படும் என நான் நம்புகிறேன். இவ்வாறு அவர் பேசினார்.

## நாட்டு மக்கள் நலனுக்காக பிரார்தனை செய்தேன் குடியரசுத் தலைவர் திரவுபதி முர்மு மதுரை மீனாட்சி அம்மன் கோயிலில் குறிப்பு

மதுரை , பிப்.19-

“நாட்டுமக்களின் நலன், தேசத்தின் வளர்ச்சிக்காக பிரார்த்தனை செய்தேன்” என மீனாட்சி அம்மன் கோயிலில் தரிசனம் செய்தபின் அங்குள்ள வருகைப் பதிவேட்டில் குடியரசுத் தலைவர் திரவுபதி முர்மு எழுதியுள்ளார்.





குடியரசுத் தலைவர் திரவுபதி முர்மு, தமிழகத்திற்கு முதன்முறையாக நேற்று இரண்டு நாள் பயணமாக புதுடெல்லியிலிருந்து தனி விமானம் மூலம் மதுரை விமான நிலையத்துக்கு காலை 11.40 மணிக்கு வந்தடைந்தார். அப்போது, தமிழக ஆளுநர் ஆர். என்.ரவி , அமைச்சர் மனோ தங்கராஜ், மாவட்ட ஆட்சியர் எஸ். அனீஷ்சேகர், மேயர் இந்திராணி ஆகியோர் பூங்கொத்து கொடுத்து வரவேற்றனர். பின்னர், விமான நிலையத்திலிருந்து காரில் புறப்பட்ட குடியரசுத் தவைர் மீனாட்சி அம்மன் கோயில் சன்னதிக்கு 12.01மணிக்கு வந்தார்.

பின்னர் 12.05 மணிக்கு அம்மன் சன்னதி வாசல் வழியாக கோயிலுக்குள் சென்று தரிசனம் செய்தார். அம்மன் சன்னதி, சுவாமி சன்னதி, கொடிமரம், துர்க்கை அம்மன் சன்னதிகளில் வழிபாடு செய்தார். பின்னர் மீனாட்சி அம்மன் கோயிலிலுள்ள வருகைப் பதிவேட்டில் தமது அனுபவத்தை குறிப்புகளாகஎழுதினார். பின்னர் அங்குள்ள உண்டியலில் காணிக்கை செலுத்தினார். அப்போது, வருகைப்பதிவேட்டில் குடியரசுதலைவர்திரவுபதி முர்மு எழுதியுள்ளதில்: “பழமையான மற்றும் வரலாற்று சிறப்புமிக்க மீனாட்சி சுந்தரேசுவரர் கோயிலுக்கு வந்ததில் மகிழ்ச்சி அடைகிறேன். பிரம்மாண்டகோபுரங்கள், கலைநயமிக்க கற்சிற்பங்கள், கட்டிடக்கலை ஆகியவை தெய்வீக அனுபவத்தைதருகின்றன. நாட்டு மக்களின் நலனுக்காகவும், தேசத்தின் வளர்ச்சிக்காகவும் பிரார்த்தனை செய்தேன்” என்று குறிப்புகள் எழுதி கையெழுத்திட்டுள்ளார்.

மதியம் 12.56 மணிக்கு அழகர்கோவில் சாலையிலுள்ள அரசு சுற்றுலா மாளிகைக்கு சென்றார். செல்லும் வழியில் கோயிலுக்கு அருகேயுள்ள கீழவெளி வீதியில் குடியரசு தலைவரைக்காண பள்ளிக் குழந்தைகள், சிறுவர்கள், பெரியவர்கள் சாலையோரங்களில் நின்று கையசைத்தனர்.

அப்போது, குழந்தைகளைப் பார்த்த குடியரசு தலைவர் காரை நிறுத்தச் சொன்னார். உடனே காரிலிருந்து இறங்கிய குடியரசுத் தலைவர் நேராக நடந்து சென்று குழந்தைகளுடன் பேசி கைகுலுக்கி குழந்தைகளை மகிச்சியடையச் செய்தார். பின்னர், குழந்தைகளுக்கு வாழ்த்து தெரிவித்து விட்டு காரில் ஏறி புறப்பட்டுச் சென்றார். திட்டமிடாமல் திடீரென குடியரசுத் தலைவர் காரை நிறுத்தி இறங்கிய சம்பவத்தால் பாதுகாப்பு அதிகாரிகள் மற்றும் போலீஸார் அதிர்ந்தனர். பின்னர், தனதுமதுரைப்பயணத்தை முடித்துக்கொண்டு கோவை சென்றடைந்தார்.



தமிழ்நாடு வணிகர் சங்க பேரமைப்பின் மதுரை மாவட்ட செயலாளர் அழகேசன் இல்ல திருமண விழா, கம்பம் நடராஜன் திருமண மண்டபத்தில் தமிழ்நாடு வணிகர் சங்க பேரமைப்பின் மாநில தலைவர் விக்கிரமராஜா, திரைப்பட இயக்குனர் பாரதிராஜா ஆகியோர் திருமணத்தை நடத்தி வைத்து வாழ்த்துரை வழங்கினார்கள். இவ்விழாவில் கம்பம் செல்வேந்திரன், எம்.எல்.ஏ பூமிநாதன், எம்.எல்.ஏ மகாராஜன், மேனாள் மாவட்ட நீதிபதி மாயாண்டி, தெய்வராஜன் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர், ராஜேந்திரன் மின்னல் கொடி பேர் அமைப்பின் மதுரை மாவட்ட தலைவர், செல்லமுத்து தேனி மாவட்ட தலைவர், செல்வகுமார் சிவகங்கை மாவட்ட தலைவர், பால குருசாமி, பேரமைப்பு நிர்வாகிகள், பிரசிடென்சி சர்வீஸ் கிளப் தலைவர் ராமன் உள்ளிட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தினர்.

### இந்தியா ஜனநாயக நாடு

## ஆனால் அதன் தலைவர் ஜனநாயகமானவர் அல்ல பிரதமர் மோடியை விமர்சித்த அமெரிக்க பணக்காரர்

ஜெர்மனி, பிப்.19-

வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு பிரதமர் மோடி பதில் சொல்லவேண்டுமென அமெரிக்க பெரும்பணக்காரர் கூறினார்.

அதானி குழுமம் பங்குச்சந்தையில் முறைகேட்டில் ஈடுபட்டதாக அமெரிக்க ஆய்வு நிறுவனமான ஹிண்டன்பர்க் அறிக்கை வெளியிட்டது. பங்குச்சந்தையில் அதானி குழுமம் அதன் பங்கு மதிப்பை அதிக அளவில் காட்டி மோசடி செய்ததாக அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டது. இந்த அறிக்கையை தொடர்ந்து பங்குச்சந்தையில் அதானி குழுமத்தின் பங்குகள் கடும் வீழ்ச்சியடைந்தன. இதனால், அதானி நிறுவனத்திற்கு பல ஆயிரம் கோடி ரூபாய் இழப்பு ஏற்பட்டது. அதேவேளை, அதானி நிறுவனங்களில் முதலீடு செய்தவர்களுக்கு பெரும் நஷ்டம் ஏற்பட்டுள்ளது.



இதனிடையே, அமெரிக்காவின் பெரும் பணக்காரரும், முதலீட்டாளருமான ஜார்ஜ் சொரோஸ் ஜெர்மனியின் முனிச்நகரில் கடந்த சில நாட்களுக்கு முன் நடந்த நிகழ்ச்சியில் பங்கேற்றார். பருவநிலை மாற்றம் மற்றும் புவிசார் அரசியல்என்றதலைப்பில் பல்கலைக்கழகத்தில் பேசிய ஜார்ஜ்சொரோஸ் இந்தியா, பிரதமர் மோடி, அதானி குறித்து பேசினார்.

அவர் பேசுகையில், இந்தியா சுவாரசியமான நாடு. இந்தியா ஜனநாயக நாடு ஆனால் அந்நாட்டின் தலைவர் நரேந்திர மோடி ஜனநாயகமானவர் அல்ல. இஸ்லாமிய மதத்தினருக்கு எதிரான வன்முறையை தூண்டுதலே நரேந்திர மோடியின் வானலாவிய உயர்வுக்கு முக்கிய காரணம். திறந்த நிலை மற்றும் மூடிய நிலை சமுதாயத்துடன் மோடி நெருக்கமான உறவு கொண்டுள்ளார். அமெரிக்கா, ஜப்பான், ஆஸ்திரேலியாவை உள்ளடக்கிய குவாட் அமைப்பில் இந்தியா உறுப்பினராக உள்ளது. ஆனால், மிகவும் தள்ளுபடி விலையில் ரஷ்யாவிடமிருந்து இந்தியாகச்சாஎண்ணெய் வாங்கி அதில் அதிக பணம் சம்பாதிக்கிறது. மோடியும், தொழிலதிபர் அதானியும் நெருங்கிய கூட்டாளிகள். அவர்களின் விதி பின்னிப்பிணைந்துள்ளது. அதானி நிறுவனம் பங்குச் சந்தை மூலம் நிதி பெற முயற்சித்து தோல்வியடைந்தது. பங்குச்சந்தையில் மோசடி செய்ததாக அதானி மீது குற்றச்சாட்டு உள்ளது. அவரின் பங்குகள் சீட்டுக்கட்டு போல சரிந்துள்ளது. இந்த விவகாரத்தில் மோடி அமைதியாக உள்ளார்.

ஆனால், நாடாளுமன்றத்திலும், வெளிநாட்டு முதலீட்டாளர்களின் கேள்விகளுக்கும் அவர் பதில் அளிக்கவேண்டும். அதானிவிவகாரம்இந்திய அரசியலில் மோடியின் வலிமையை குறைக்கும். மேலும், இது கட்டாயம் தேவைப்படும் நிறுவன சீர்திருத்தங்களுக்கான கதவுகளை உந்தி தள்ளும். நான் அனுபவமில்லாதவனாக இருக்கலாம், ஆனால் இந்தியாவில் ஜனநாயக மறுமலர்ச்சியை நான் எதிர்பார்க்கிறேன்’ என்றார். இந்தியா குறித்தும் பிரதமர் மோடி குறித்தும் அமெரிக்க பெரும் பணக்காரர் ஜார்ஜ் சொரோஸ் தெரிவித்த கருத்துக்கு மத்திய அரசு கண்டனம் தெரிவித்துள்ளது. இது தொடர்பாக மத்திய மந்திரி ஸ்மிருதி இராணி கூறுகையில், தனது மோசமான செயல்களை வெற்றி பெற செய்ய வளைந்து கொடுக்கும் அரசு வேண்டுமென்று ஜார்ஜ் சொரோஸ் நினைக்கிறார். அவரது பேச்சில் இருந்தே பிரதமர் மோடி போன்ற தலைவர்களை குறிவைக்க 1 மில்லியன் டாலர்களை நிதியுதவி வழங்கியுள்ளார் என தெரியவந்துள்ளது. ஜார்ஜ் சொரோஸ் இந்திய ஜனநாயகத்தை அழித்து அவரால் தேர்ந்தெடுக்கப்பட்ட நபர்கள் மூலம் அரசை நடத்தமுயற்சிக்கிறார். நாம் வெளிநாட்டு சக்திகளை கடந்த காலங்களில் முறியடித்துள்ளோம், மீண்டும் முறியடிப்போம் என்றார்.

# இன்று

# 19-2-2023



சுபமுகூர்த்தம்



தமிழ் தாத்தா உ.வே.சா. பிறந்த நாள்

நுங்கு : கொழுப்பை குறைத்து உடல் எடையை குறைக்கும்
சக வருடம் 1944 மாகம் 30

| சுபகிருது மாசி 7 | FEB - SUN ஞாயிறு | ரஜப் 27 | தேய்பிறை 050 / 315 |
|---|---|---|---|

தேய். சதுர்த்தசி 23.46 (மா. 04.03) திருவோணம் 19.43 (மா. 02.26) தியாஜ் 29.05 அகஸ் 29.15 அமிர்த 19.43 மேல் மரண. சுபமுகூர்த்தம். துவாபர யுகாதி. குயின் குவ கௌமி. நத்தம் மாரியம்மன் பாற்குடக் காட்சி. ராமேஸ்வரம் சுவாமி அம்பாள் ரதோற்சவம்.

| | நல்லநேரம் | கௌ.த.நே. | இராகு | குளிகை | எமகண்டம் |
|---|---|---|---|---|---|
| காலை | 7.30-8.30 | 10.30-11.30 | 04.30 | 03.00 | 12.00 |
| மாலை | 3.30-4.30 | 1.30-2.30 | 06.00 | 04.30 | 01.30 |

சூலம் : மேற்கு; பரிகாரம் : வெல்லம். கும்ப லக்னம் இருப்பு நா. 3 வி. 47. சந்திராஷ்டமம் : புனர்பூசம், பூசம். கரணம் : 10.30-12. சூரிய உதயம் : 6.33.

காற்று உள்ளபோதே தூற்றிக்கொள்

தீ சதுர்த்தசி

**இராசிபலன்**

| | |
|---|---|
| மேஷம் | வரவு |
| ரிஷபம் | லாபம் |
| மிதுனம் | அசதி |
| கடகம் | அமைதி |
| சிம்மம் | துணிவு |
| கன்னி | சினம் |
| துலாம் | புகழ் |
| விருச்சி | பாராட்டு |
| தனுசு | நலம் |
| மகரம் | உதவி |
| கும்பம் | ஓய்வு |
| மீனம் | நட்பு |

## சிந்திப்போம்.... செயல்படுவோம்

எல்லோரும்
பயணிக்கிறார்கள் என்று
நீயும் பின்தொடராதே
உனக்கான பாதையை
நீயே தேர்ந்தெடு...






# அறந்தாங்கி மேல்மங்கலத்தை சேர்ந்த ரவிச்சந்திரனுக்கு கலை நன்மணி விருது

அறந்தாங்கி பிப்.19–

புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கியை அடுத்த மேல்மங்கலத்தை சேர்ந்த ரவிச்சந்திரன் நாதஸ்வரம் தமிழ்நாடு அரசின் கலை பண்பாட்டுத்துறை மூலமாக கலை நன்மணி விருதை புதுக்கோட்டை மாவட்ட ஆட்சித்தலைவர் கவிதா ராமு வழங்கினார்.



புதுக்கோட்டை மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலக அரங்கில் நடைபெற்ற விழாவில் தமிழ்நாடு அரசு கலை பண்பாட்டுதுறை மற்றும் புதுக்கோட்டை மாவட்ட கலை மன்றம் சார்பில் 2021–ஆம் ஆண்டிற்கான சிறந்த நாதஸ்வர கலைஞருக்கான கலை நன்மணி விருதை அறந்தாங்கியை அடுத்த மேல்மங்கலம் பகுதியில் உள்ள சிதம்பரம் தவில் வித்வான் மகன் முனைவர் ரவிச்சந்திரனுக்கு வழங்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் கலைத் துறையில் முனைவர் பட்டம் பெற்ற ரவிச்சந்திரனுக்கு கலை நன்மணி விருது பட்டமும் பொற்கிழியையும் மாவட்ட ஆட்சித்தலைவர் கவிதா ராமு வழங்கி பாராட்டினார்.

கலை நன்மணி விருது பெற்ற ரவிச்சந்திரன் 37 வருடங்களாக கலை துறையில் சேவை புரிந்து வருகிறார். இவருடைய தந்தை சிதம்பரம் தவில் வித்வான் பல கலை நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு சிறப்பு செய்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

# உளுந்தூர்பேட்டை அருகே சார்லஸ் கல்லூரி விளையாட்டு விழாவில் மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் மாணவர்களுக்கு பரிசளிப்பு

கள்ளக்குறிச்சி பிப்.19–

கள்ளக்குறிச்சி மாவட்டம், உளுந்தூர்பேட்டை அருகே உள்ள எறையூர் கிராமத்தில், இயங்கிவரும் சார்லஸ் கலை அறிவியல் கல்லூரியில் நான்காம் ஆண்டு விளையாட்டு மற்றும் பரிசளிப்பு விழா நடைபெற்றது.



இவ்விழாவிற்கு கல்லூரியின் தாளாளர் பாத்திமா ராணி தலைமை தாங்கினார், சிறப்பு அழைப்பாளராக மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் மோகன்ராஜ் கலந்துகொண்டு ஒலிம்பிக் தீபம் ஏந்தியபடி நடைபெற்ற கல்லூரி மாணவ மாணவிகளின் அணிவகுப்பினை ஏற்றுக் கொண்டார், சிறப்புரையின் போது மாணவர்கள் படிப்பு மட்டுமின்றி விளையாட்டுகளிலும் அதிக கவனம் செலுத்தி அனைத்து விளையாட்டுப் போட்டிகளிலும் கலந்து கொண்டு சிறப்பாக விளையாடி மாநிலம் மற்றும் உலக அளவில் சாதனை படைக்க வேண்டுமென சிறப்புரை ஆற்றினார்.

தொடர்ந்து விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ மாணவிகளுக்கு பதக்கங்கள் மற்றும் சான்றிதழ்களை வழங்கினார். இதற்கு முன்னதாக ஒலிம்பிக் தொடர்ஜோதி ஓட்டம் எறையூரில் இருந்து புறப்பட்டு கல்லூரி வரை நடைபெற்று நிறைவடைந்தது.

இவ்விழாவில் எறையூர் பங்குத்தந்தை ஆல்பர்ட், கல்லூரியின் முதல்வர் வில்லியம் சுரேஷ்குமார், துணை முதல்வர் சிந்தியா ராபிக்ஷன், விளையாட்டு விழா ஒருங்கிணைப்பாளர் அன்பரசன், உடற்கல்வித்துறை இயக்குனர் ஜெயக்குமார், மற்றும் இருபால் பேராசிரியர்கள் மாணவ மாணவிகள் கலந்து கொண்டனர்.








அரியலூர் பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்க தலைவர் பன்னீர்செல்வம் குற்றச்சாட்டுகளின் அடிப்படையில் பணி நீக்கம் செய்யப்பட்டதையடுத்து, துணைத் தலைவர் கல்லங்குறிச்சி பாஸ்கர், பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கத்தின் தலைவர் பொறுப்பை ஏற்றுக் கொண்டார். அருகில் சங்கத்தின் செயலாளர் சுப்பிரமணி, பால் வெண்டர் சசிகுமார் உள்ளிட்ட பலர் உள்ளனர்.

# புதுக்கோட்டை ஸ்ரீ வெங்கடேஸ்வரா மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியில் மழலையர் பட்டமளிப்பு விழா

புதுக்கோட்டை பிப்.19–

புதுக்கோட்டை, திருக்கோகர்ணம் ஸ்ரீ வெங்கடேஸ்வரா மெட்ரிக். மேல்நிலைப் பள்ளியில் மழலையர் குழந்தைகளுக்கான பட்டமளிப்பு விழா நடைபெற்றது.



விழாவிற்கு பள்ளியின் முதல்வர் கவிஞர் தங்கம் மூர்த்தி தலைமையேற்றார். விழாவில் புதுக்கோட்டை நகர் மன்ற தலைவர் திலகவதி செந்தில் மற்றும் கல்வியாளர் கவிஞர் கீதா ஆகியோர் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு குழந்தைகளுக்கு பட்டமளித்து சிறப்புரையாற்றினர். பள்ளியின் ஆலோசகர் கவிஞர் அஞ்சலிதேவி தங்கம்மூர்த்தி மாணவர்களுக்கு வாழ்த்துரை வழங்கினார். இது மாணவர்களுக்கான விழா என்பதால் யூ.கே.ஜி மாணவர்கள் கருணாசாகர் மற்றும் சுனில் தேவ் ஆகியோர் தாங்கள் மழலை வயதில் பட்டம் பெற்ற அனுபவத்தை பகிர்ந்துக் கொண்டனர்.

சிறப்பு விருந்தினர் நகர்மன்ற தலைவர் திலகவதி செந்தில் பேசும் போது, "கம்பன் வீட்டு கட்டுதறியும்" கவிபாடும் என்பதற்கு இணங்க பள்ளி முதல்வரை போல மாணவர்களும் திறமையோடு இருக்கிறார்கள். பள்ளி விட்டு வந்ததும் பெற்றோர்கள் குழந்தைகளிடம் கலந்துரையாடி தினமும் இரண்டு மணி நேரம் பாடங்களை கற்க செய்ய வேண்டும். பட்டம் பெற்ற மழலை மாணவர்களுக்கும் கற்பிக்கும் ஆசிரியப் பெருமக்களுக்கும் வாழ்த்துக்களை தெரிவிக்கிறேன் என்று பேசினார்.

தொடர்ந்து சிறப்புரையாற்றிய கவிஞர் கீதா குழந்தைகளோடு கலந்துரையாடி டோரா புஜ்ஜி, ஜோட்டாபீம் இன்னும் பல கார்ட்டூன்களையும் எடுத்துக் கூறியதோடு பெற்றோர்கள் குழந்தைகளுக்கு வழங்க வேண்டிய உணவுகள், தவிர்க்க வேண்டிய உணவுகள் மற்றும் குழந்தைகளை அதிக நேரம் கைபேசி பயன்படுத்த செய்வதால் ஏற்படும் கண் பார்வை குறைபாடு, மன உளைச்சல், தூக்க மின்மை ஆகிய குறைபாடுகள் பற்றியும் உரையாற்றினார். முன்னதாக பள்ளியின் மேலாண்மை இயக்குநர் நிவேதிதா மூர்த்தி வரவேற்புரையாற்ற, நிறைவாக மழலை மாணவர் ஹேம்நாத்ரதன் நன்றி கூறினார்.

விழாவில் பள்ளியின் துணை முதல்வர் குமாரவேல், அரசு சிறப்பு வழக்கறிஞர் செந்தில்குமார், மகாத்மா ரவிசந்திரன், வேங்கடசுப்பிரமணியன், கனகம்மன் பாபு, கவிஞர் முகேஷ், ராஜேஷ், தனபால், லோகேஷ் மற்றும் பள்ளியின் ஒருங்கிணைப்பாளர்கள் கௌரி, அபிராம சுந்தரி, பவானி, யுகேஜி ஆசிரியைகள் சந்திரகலா, பௌலின், மேலாளர் ராஜா, ஆசிரியர்கள் உதயகுமார், ராமன் மற்றும் ஏராளமான பெற்றோர்களும் கலந்து கொண்டு பட்டம் பெற்ற மாணவர்களுக்கு பாராட்டுகளை தெரிவித்தனர். விழாவினை ஆசிரியர்கள் ஆனந்தி, காசாவயல் கண்ணன் ஆகியோர் தொகுத்து வழங்கினர்.

# சென்னையில் இளம் பெண்கள் தூக்கிட்டு தற்கொலை

சென்னை பிப்.19–

ஆவடி அருகே இளம்பெண் தூக்குப்போட்டு தற்கொலை செய்து கொண்டார்.





ஆவடியை அடுத்த கோவில்பதாகை பகுதியை சேர்ந்தவர் ராஜேந்திரன். இவருடைய மகள் வினோதினி (22). இவர், வீட்டில் இருந்தபடியே அழகப்பா பல்கலைக்கழகத்தில் எம்.பி.ஏ. படித்து வந்தார். வினோதினி கடந்த வியாழனன்று மதியம் வீட்டில் யாரும் இல்லாத நேரத்தில் வீட்டின் மொட்டை மாடிக்கு செல்லும் வழியில் உள்ள இரும்பு கேட்டில் புடவையால் தூக்குப்போட்டு தற்கொலை செய்து கொண்டார். இதுகுறித்து ஆவடி டேங்க்பேக்டரி போலீசார் வழக்குப்பதிவு செய்து தற்கொலைக்கான காரணம் குறித்து விசாரித்து வருகின்றனர்.

சென்னை, சைதாப்பேட்டை, பழைய மாம்பலம் சாலையை சேர்ந்தவர் சுதாலெட்சுமி (33). இவருடைய கணவர் ராமசந்திரன். இவர்களுக்கு 2 மகள் உள்ளனர். சுதாலெட்சுமிக்கும், அவரது கணவருக்கும் கடந்த சில நாட்களாகவே கருத்து வேறுபாடு இருந்ததாக கூறப்படுகிறது. இதனால் மன உளைச்சலில் இருந்த சுதாலெட்சுமி நேற்று முந்தினம் வீட்டில் தூக்குப்போட்டு தற்கொலை செய்து கொண்டார். இதுபற்றி குமரன் நகர் போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரித்து வருகிறார்கள்.

# புதுச்சேரியில் கடந்த 11 நாட்களாக தொடரும் பால் தட்டுப்பாடு

புதுவை பிப்.19–

புதுவையில் 11–வது நாளாக பால் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதால், பால் வாங்க முடியாமல் பொதுமக்கள் அவதியடைந்துள்ளனர்.





புதுவை மாநில மக்களின் முதல் தேர்வாக பாண்லே பால் உள்ளது. இந்த பால் நாளொன்றுக்கு 1லட்சத்து 5 ஆயிரம் லிட்டர் மக்களின் தேவையாக உள்ளது. ஆனால் கடந்த மாதம் 80 ஆயிரம் லிட்டர் மட்டுமே பால் சப்ளை செய்யப்பட்டது. இதனால் கடுமையான பால் தட்டுப்பாட்டால் மக்கள் திண்டாடினார்கள். வெளிமாநிலங்களிலும் பால்வாங்கமுடியாதநிலை ஏற்பட்டது. ஏனெனில் வெளி மாநிலங்களில் பால் கொள்முதல் விலை உயர்த்தப்பட்ட நிலையில் கூடுதல் விலை கொடுக்க முடியாமல் பாண்லே நிர்வாகம் தள்ளாடியது.

இந்த நிலையில், புதுவையில் 11–வது நாளாக பால் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. பால் பூத்துகளுக்கு வழங்கப்படும் பால் சப்ளையின் அளவும் குறைக்கப்பட்டு உள்ளது. இதனால் பூத்துகளுக்கு வரும் பால் உடனடியாக விற்று தீர்ந்து விடுகிறது. எனவே தனியார் பாலை அதிக விலை கொடுத்து வாங்கும் நிலைக்கு மக்கள் தள்ளப்பட்டுள்ளனர். வெளிமாநிலங்களில் பால் கொள்முதல் செய்வது தொடர்பாக அதிகாரிகளுக்கு இடையே மோதல் இருந்து வருவதாகவும், அவர்களுக்கு இடையே ஒற்றுமை ஏற்படும் வரை பால் தட்டுப்பாடு இருந்து கொண்டேதான் இருக்கும் என்று ஊழியர்கள் வேதனை தெரிவிக்கின்றனர்.

# விழுப்புரம் அன்பு ஜோதி ஆசிரம வழக்கு விசாரணையை சிபிசிஐடிக்கு மாற்றி தமிழக அரசு உத்தரவு

விழுப்புரம் பிப்.19–

விழுப்புரம் அன்பு ஜோதி ஆசிரம வழக்கு விசாரணையை சிபிசிஐடிக்கு மாற்றி தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது.



விழுப்புரம் அருகே உள்ள குண்டலபுலியூர் கிராமத்தில் இயங்கி வந்த அன்புஜோதி ஆசிரமத்தில் மனநலம் குன்றியோர், ஆதரவற்றோர் மற்றும் மாற்றுத்திறனாளிகள் தங்க வைக்கப்பட்டு பராமரிக்கப்பட்டனர். இங்கு பல்வேறு முறைகேடுகள் நடைபெற்று வருவதாக புகார்கள் வந்தன. இதையடுத்து நடத்தப்பட்ட விசாரணையில் ஆசிரமம் உரிய அனுமதியின்றி நடத்தப்பட்டது தெரியவந்தது.

இங்கு பராமரிக்கப்பட்டு வருபவர்களை அடித்து துன்புறுத்தியது, பெண்களை பாலியல் வன்கொடுமை செய்தது உள்ளிட்ட பல்வேறு திடுக்கிடும் தகவல்கள் வெளியாகியுள்ளது. இதையடுத்து 13 பிரிவுகளின் கீழ் வழக்கு பதிவு செய்து, ஆசிரம நிர்வாகி அன்பு ஜுபின் பேபி, அவரது மனைவி மரியா மற்றும் ஊழியர்கள் என 9 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். இந்த நிலையில், இந்த வழக்கின் விசாரணையை சிபிசிஐடி விசாரணைக்கு மாற்றி டிஜிபி சைலேந்திர பாபு உத்தரவிட்டுள்ளார்.

### ரோகித் சர்மா கையெழுத்திட்ட பேட்டை

# மத்திய அமைச்சர் ஜெய்சங்கர் ஆஸ்திரேலிய அமைச்சருக்கு பரிசாக அளித்துள்ளார்

ஆஸ்திரேலியா பிப்.19–

ஆஸ்திரேலியாவுக்கு பயணம் மேற்கொண்டுள்ள மத்திய அமைச்சர் ஜெய்சங்கர் அந்நாட்டு வெளியுறவு அமைச்சரிடம் ரோகித் சர்மா கையெழுத்திட்ட பேட்டை பரிசாக அளித்துள்ளார்.



ஆஸ்திரேலியா நாட்டுக்கு மத்திய வெளிவிவகார துறை அமைச்சர் ஜெய்சங்கர் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ளார். அந்நாட்டில் அவருக்கு உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது. அதன் பின்னர், அந்நாட்டு வெளியுறவு அமைச்சர் பென்னி வாங்கை நேரில் சந்தித்து பேசினார். இந்த சந்திப்பின்போது, கிரிக்கெட் வீரர் ரோகித் சர்மா கையெழுத்திட்ட பேட் ஒன்றை அவருக்கு பரிசாக வழங்கினார். இதற்கு பதிலாக, மத்திய அமைச்சர் ஜெய்சங்கர் பெயர் எழுதிய ஆஸ்திரேலிய கிரிக்கெட் அணியின் ஜெர்சி ஒன்றை வாங் பரிசாக வழங்கினார். இந்த பயணத்தில் ஆஸ்திரேலிய செயல்திட்ட கொள்கை மையம் மற்றும் இந்தியாவின் ஓ.ஆர்.எப். சார்பில் நடத்தப்படும் பேச்சுவார்த்தையில் மத்திய அமைச்சர் ஜெய்சங்கர் கலந்து கொண்டு முக்கிய உரையாற்ற உள்ளார்.

இதில், இந்தியா–ஆஸ்திரேலியா இடையேயான நல்லுறவு பற்றி ஆலோசிக்கப்படுவதுடன், இந்தோ–பசிபிக் பிராந்தியத்தின் வளங்களுக்கான திறந்த நிலையிலான மற்றும் வெளிப்படை தன்மையுடன் கூடிய ஆழ்ந்த ஒருங்கிணைப்பு மற்றும் பங்காற்றுவது எப்படி? என்பது பற்றி இரு நாடுகளும் விவாதிக்க உள்ளன. இந்த பேச்சுவார்த்தையின்போது, அமைச்சர்கள் மற்றும் உயர்மட்ட அரசு பிரதிநிதிகள், அவற்றுடன் தொழில்துறை நிபுணர்கள் மற்றும் பொது மக்கள் பங்கேற்கும் தொடர்புடைய நிகழ்வுகளும் நடைபெற உள்ளன.

ஜி–20 மாநாட்டுக்கு இந்தியா தலைமையேற்று உள்ள நிலையில், இந்த பேச்சு வார்த்தையானது புதுடெல்லியில் வருகிற மார்ச் 1–ந் தேதி நடைபெற உள்ள ஜி–20 அமைச்சர்கள் மட்டத்திலான கூட்டத்திற்கு வழிவகுக்கும் வெளிப்பாடான நிகழ்ச்சியாக இருக்கும். இந்த பேச்சுவார்த்தையின் போது, புவி அரசியல், தொழில் நுட்பம் மற்றும் பொருளாதாரம் தொடர்புடைய முன்னணி பிராந்திய நிபுணர்களின் முக்கிய உரைகளும் இடம் பெற உள்ளன. இந்த பேச்சு வார்த்தையானது, உலக அளவில் சட்டம் மற்றும் ஒழுங்கில், டிஜிட்டல் துறை ஏற்படுத்திய பின்விளைவுகளை பற்றிய ஆலோசனை மேற்கொள்ளும் இணையதளம் மற்றும் முக்கிய தொழில்நுட்பங்களை பற்றிய வருடாந்திர மாநாடு ஆகும்.

# அறந்தாங்கி அருகே நியாய விலைக்கடையில் வழங்கப்பட்ட அரிசியை சாப்பிட்டவர்களுக்கு வயிற்று வலி, வாந்தி, மயக்கம் – பொதுமக்கள் அச்சம்

அறந்தாங்கி பிப்.19–

அறந்தாங்கி அருகே எழுநூற்றிமங்கலம் நியாய விலைக்கடையில் வழங்கப்பட்ட அரிசியை சமைத்து சாப்பிட்டவர்களுக்கு வயிற்று வலி, வாந்தி, மயக்கம். பிளாஸ்டிக் அரிசி கலப்படமா? என பொதுமக்கள் அச்சம்

புதுக்கோட்டை மாவட்டம், ஆவுடையார் கோவில் தாலுகா, புண்ணிய வயல் ஊராட்சிக்குட்பட்ட எழுநூற்றிமங்கலம் கிராமத்தில் 250–க்கும் மேற்பட்ட குடும்பங்களில் ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் வசித்து வருகின்றனர்.

கடந்த ஒரு வாரத்திற்கு முன்பு எழுநூற்றிமங்கலம் அங்காடியில் அரிசி, பருப்பு, கோதுமை உள்ளிட்ட பொருட்களை அப்பகுதி மக்கள் வாங்கிச் சென்றுள்ளனர். இந்நிலையில் இரண்டு நாட்களுக்கு முன்பு அங்காடியில் வாங்கப்பட்ட அரிசியை பொதுமக்கள் சமைத்து சாப்பிட்டனர். அப்போது அந்த அரிசியை கொண்டு சமைக்கப்பட்ட சாதத்தை உண்ட 10–க்கும் மேற்பட்டோருக்கு வயிற்று வலி, வாந்தி, வயிற்று போக்கு உள்ளிட்ட உபாதைகள் ஏற்பட்டு, அரசு மற்றும் தனியார் மருத்துவமனையில் தனித்தனியே சிகிச்சை பெற்று வந்துள்ளனர். மேலும் அப்பகுதி இளைஞர்கள் சிலர் அந்த அரிசியை தண்ணீரில் ஊற வைத்து பார்த்ததில் தண்ணீரில் பிளாஸ்டிக் போல் அரிசி மிதந்துள்ளது. இதனால் அங்காடியில் வாங்கப்பட்ட அரிசியை யாரும் பயன்படுத்த வேண்டாம் என அப்பகுதி இளைஞர்கள் முத்து மாரியம்மன் கோவில் மைக் மூலம் தெரியப்படுத்தியதோடு, பாதிக்கப்பட்டோர் அனைவரும் முத்துமாரியம்மன் கோவில் வளாகத்தில் கூடி உடனடியாக சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகளுக்கு தகவல் தெரிவித்துள்ளனர். அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுப்பதோடு பாதிக்கப் பட்டவர்களுக்கு மருத்துவ முகாம் அமைத்து சிகிச்சை அளிக்கப்பட வேண்டும், கலப்பட அரிசிக்கு பதிலாக மாற்று அரிசி வழங்க வேண்டும் என அப்பகுதி மக்கள் கோரிக்கை வைத்துள்ளனர்.



மேலும் இது தொடர்பாக ஆவுடையார் கோவில் வட்ட வழங்கல் அதிகாரியிடம் கேட்டபோது, நியாய விலைக் கடைகளில் வழங்கப்பட்ட சாதாரண அரிசியில் செறிவூட்டப்பட்ட அரிசி கலந்து முதல் கட்டமாக வழங்கப்பட்டிருக்கிறது. வருகின்ற ஏப்ரல் மாதம் நியாய விலை கடைகளில் செறிவூட்டப்பட்ட அரிசி அனைவருக்கும் விநியோகம் செய்யப்பட்டுள்ளது என்றும் செறிவூட்டப்பட்ட அரிசியில் இரும்பு, ஃபோலிக் அமிலம் மற்றும் வைட்டமின் பி 12 உள்ளிட்ட சத்துக்கள் கிடைக்கிறது என்றும் செறிவூட்டப்பட்ட அரிசி வழங்கும் திட்டம் நியாய விலைக்கடைகள் மூலம் வழங்கப்பட்டு வருவதாகவும், புதுக்கோட்டை மாவட்டத்தில் வருகிற ஏப்ரல் மாதம் முதல் செறிவூட்டப்பட்ட அரிசி இந்திய உணவுக் கழகத்திலிருந்து பெறப்பட்டு நியாய விலைக்கடைகள் வாயிலாக குடும்ப அட்டைதாரருக்கு வழங்கப்பட உள்ளது எனவும் அரிசியை பயன்படுத்த மக்கள் அச்சம் பட தேவையில்லை என்று கூறினர். அவ்வாறு செறிவூட்டப்பட்ட அரிசியை மக்கள் பயன்படுத்த விரும்பவில்லை என்றால் அவர்களுக்கு சாதாரண அரிசி மாற்றி வழங்கப்படும் என தெரிவித்தார்.

# நாட்டின் வளர்ச்சிக்கு அனைவருக்கும் உயர் கல்வி அவசியம் வேலூர் விஐடி பல்கலைக்கழக வேந்தர் ஜி.விஸ்வநாதன் பேச்சு




வேலூர், பிப்.18 –

மத்திய அரசின் மக்கள் தொடர்பகம் மற்றும் தகவல் ஒளிபரப்பு துறை அமைச்சகத்தின் சார்பில், வேலூர் புதிய பேருந்து நிலையம் அருகே உள்ள தனியார் மண்டபத்தில் அறியப்படாத சுதந்திரப் போராட்ட வீரர்கள் மற்றும் மக்கள் நலத்திட்டங்கள் குறித்த 5 நாட்கள் நடைபெறும் புகைப்பட கண்காட்சி துவங்கியது.

இதனை வேலூர் விஐடி பல்கலைக்கழக வேந்தர் ஜி.விஸ்வநாதன் துவக்கி வைத்து பார்வையிட்டார். தொடர்ந்து மாநில அளவிலான குத்துச்சண்டை போட்டியில் தங்கப் பதக்கம் வென்ற வேலூரைச் சேர்ந்த 11 ஆம் வகுப்பு பயிலும் பள்ளி மாணவி ஜெருஷா ஜாஸ்மினுக்கு கேடயம் வழங்கி பாராட்டு தெரிவித்தார்.

சுதந்திர போராட்ட வீரர்கள் குறித்த பேச்சுப்போட்டி, கட்டுரை போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ, மாணவிகளுக்கு பரிசுகள் மற்றும் சான்றிதழ்கள், ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி திட்டத்தில் ஊட்டச்சத்து மிக்க குழந்தைகளின் தாய்மார்களுக்கு பரிசுகள், வேளாண்மை திட்டத்தில் மானிய நிதியில் வழங்கப்பட்ட வேளாண் கருவிகளை விவசாயிகளுக்கு ஜி.விஸ்வநாதன் வழங்கினார்.

இந்த நிகழ்ச்சியில் மத்திய மக்கள் தொடர்பு தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி மண்டல இயக்குனர் காமராஜ் உள்பட பலர் பங்கேற்றனர். பின்னர் நாட்டின் விடுதலைக்கு பாடுபட்ட முக்கிய தலைவர்களின் புகைப்படங்கள், அவர்களின் வாழ்க்கை குறிப்புகள், மற்றும் மத்திய அரசின் பல்வேறு திட்டங்கள் குறித்த விழிப்புணர்வு பதாகைகளும் வைக்கப்பட்டு இருந்தது. இதனை பல்வேறு பள்ளி, கல்லூரி மாணவ, மாணவிகள் மற்றும் பொதுமக்கள் கலந்துகொண்டு பார்த்து பயனடைந்தனர்.

நிகழ்ச்சியில் பேசிய வேலூர் விஐடி பல்கலைக்கழக வேந்தர் ஜி.விஸ்வநாதன், நாட்டின் வளர்ச்சி அனைவருக்கும் கிடைக்க வேண்டுமானால் அனைவருக்கும் கல்வி வழங்க வேண்டும். அதிலும் உயர் கல்வி அனைவருக்கும் கிடைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். உயர்கல்வியில் நாம் பின்தங்கியுள்ளோம். என்று பேசினார்.

நிகழ்ச்சியில் மத்திய அரசின் கள விளம்பர அலுவலர் முரளி, உதவி அலுவலர் ஜெய கணேஷ், வருவாய் கோட்டாட்சியர் பூங்கொடி, வேலூர் மாவட்ட வேளாண் துறை இணை இயக்குனர் விஸ்வநாதன், வேலூர் அஞ்சலக கோட்ட கண்காணிப்பாளர் ராஜகோபாலன் உள்பட பலர் பங்கேற்றனர்.



தமிழ்நாடு பத்திரிக்கை போட்டோகிராபர்கள் சங்க புகைப்பட கண்காட்சி நிறைவிழாவில் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பேசிய போது எடுத்த படம் இந்நிகழ்வில் நக்கீரன் ஆசிரியர் கோபால், நியூஸ் 18 கார்த்திகை செல்வன்,டைம்ஸ் ஆப் இந்தியா செய்தி ஆசிரியர் அருண் ராம்,தினமலர் தலைமை நிருபர் குமார், இந்தியன் எக்ஸ்பிரஸ் துணை செய்தி ஆசிரியர் ரஞ்சிதா குணசேகரன், உள்பட பலர் பங்கேற்றனர்.

# ஆரணியில் சூதாட்டத்தில் ஏற்பட்ட சண்டையில் படுகாயம் அடைந்த வாலிபர் பலி

**ஊத்துக்கோட்டை, பிப். 18 –**

திருவள்ளூர் மாவட்டம், சோழவரம் ஒன்றியம், ஆரணி அத்திக்குளம் தெருவில் வசித்து வந்தவர் ரவி (வயது47). கடந்த ஜனவரி மாதம் 8-ம் தேதி சுப்பிரமணி நகர் பகுதியில் வசித்து வரும் மோகன் என்பவருடன் ரவி தனது வீட்டின் அருகே பணம் வைத்து சூதாட்டத்தில் ஈடுபட்டார்.

அப்பொழுது ஏற்பட்ட தகராறில் மோகன் ரவியின் கன்னத்தில் ஓங்கி அறைந்தாராம். இதில் மயங்கி விழுந்த ரவியை அருகில் இருந்தவர்கள் மீட்டு ஆரணி அரசு ஆரம்ப சுகாதார நிலையத்துக்கு கொண்டு சென்று முதலுதவி சிகிச்சை அளித்தனர்.

பின்னர், சென்னை ராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டார். அங்கிருந்து சென்னை ஸ்டான்லி ஆஸ்பத்திரிக்கு மேல் சிகிச்சைக்காக அனுப்பி வைக்கப்பட்டார். இந்நிலையில், சிகிச்சை பலனின்றி ரவி பரிதாபமாக பலியானார். இந்தச் சம்பவம் குறித்து ஆரணி காவல் நிலைய போலீசார் வழக்கு பதிவு செய்து பல்வேறு கோணங்களில் விசாரணை செய்து வருகின்றனர்.

# சீர்காழியில் பள்ளி மாணவர்கள் உருவாக்கிய தொலைநோக்கியில் சூரியனை பார்த்து மாணவர்கள் ஆசிரியர்கள், பெற்றோர்கள் மகிழ்ச்சி




சீர்காழி, பிப்,18

மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழி சுபம் பள்ளி மாணவர்கள் உருவாக்கிய வானலாவிய தொலைநோக்கி மூலமாக 15 கோடி கிலோ மீட்டர் தூரம் உள்ள சூரியனை பார்த்து மகிழ்ந்தனர்.

மேலும் சூரியனில் உள்ள கரும்புள்ளிகளையும், சூரியனை பற்றி தெரிந்து கொள்ள மாணவர்கள் உருவாக்கிய தொலைநோக்கி பள்ளி வளாகத்தில் வைத்துள்ளனர். இதனை மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள் என அனைவரும் தொலைநோக்கி மூலமாக சூரியனை பார்த்து மகிழ்ந்தனர். சூரியனில் உள்ள கரும்புள்ளிகள் ஒவ்வொன்றும் ஆறு பூமிகளை உள்ளடக்கிய அளவிற்கு பெரிய கரும்புள்ளியாகும். அதனை பள்ளியில் இருந்து பார்த்து தெரிந்து கொண்டனர்.

சூரியனை நேராக கண்ணில் பார்க்க முடியாத நிலையில், தொலைநோக்கி மூலமாக பார்த்து அதில் உள்ள விவரங்களை தெரிந்து கொண்டதில் பெரும் மகிழ்ச்சி அடைந்ததாக பெற்றோர்கள் தெரிவித்தனர். இளம் வயதிலே கிராமபுற பள்ளி மாணவர்கள் தொலைநோக்கியை உருவாக்கியது இஸ்ரோ விஞ்ஞானிகள் பாராட்டியுள்ளனர். சூரியனை காண திரளான பொதுமக்கள் வந்திருந்தனர்.




புதுச்சேரி அடுத்து தமிழக பகுதியான கண்டமங்கலம் கிராமத்தில் கீர்த்தி ஸ்ரீ திருமண மண்டபத்தில் மைசூர் புனர்வாழ்வு மற்றும் வளர்ச்சி தன்னார்வத் தொண்டு நிறுவனம் மற்றும் நீர் மேலாண்மை திட்டம் ஒன்றிற்கு பெருநிறுவன சமூக பொருப்பு அடிப்படையில் நிதி உதவி அளித்த இந்துஸ்தான் யூனிலீவர் நிறுவனம் சேர்ந்து நடத்திய கூட்டமைப்பாளர்கள் மாநாட்டில் கலந்து கொண்டு , புகழ் பெற்ற தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தின் குடுமியான்மலை விவசாயக் கல்லூரி மாணவிகள் அரங்கேற்றிய கண்காட்சியை புராணசிங்கப்பாலையம் விவசாயி அர்ஜுனன் இணைந்து திறந்து வைத்து, பிறகு விவசாயிகளின் விளை பொருட்கள் மற்றும் சேவைகளை சந்தைமயமாக்க சாதனைப் படைத்த ஒரு சில சிறந்த விவசாயிகள் உருவாக்கிய தனித்துவ உத்திகளை அந்த நிகழ்ச்சியில் பங்கேற்ற ஏராளமான மற்ற விவசாயிகளுடன் தகவலை பகிர்ந்து கொண்டனர். விவசாயிகள், புதுச்சேரி அரசு வேளாண் துறை மற்றும் வேளாண் அறிவியல் நிலையம் அதிகாரிகள், தனியார் பெருநிறுவனம், தன்னார்வத் தொண்டு நிறுவனம் மற்றும் மாணவியர் பங்கேற்ற கூட்டமைப்பாளர்கள் மாநாடு நடைபெற்றது

# மகா சிவராத்திரியை ஒட்டி 19 சிவாலயங்களுக்கு அபிஷேக பொருட்கள் வழங்கும் நிகழ்ச்சி



ஊத்துக்கோட்டை, பிப். 19 –

திருவள்ளூர் மாவட்டம், சோழவரம் ஒன்றியம், சிறுவாபுரியை சுற்றியுள்ள சிதிலமடைந்த பராமரிப்பு இல்லாத 19 சிவாலயங்களுக்கு மகா சிவராத்திரியை முன்னிட்டு 4 கால பூஜைகள் செய்ய தேவையான விபூதி, குங்குமம், பால், தயிர், நெய், தேன் உள்ளிட்ட 20 வகையான பூஜை பொருட்கள் வழங்கும் நிகழ்ச்சி சிறுவாபுரி பாலசுப்பிரமணிய சுவாமி திருக்கோவில் வளாகத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சிக்கு, திருக்கோவிலின் செயல் அலுவலர் செந்தில்குமார் தலைமை தாங்கி பூஜை பொருட்கள் அடங்கிய தொகுப்பை வழங்கினார். இதில், திருக்கோவில் குருக்கள் ஆனந்தன், ஊராட்சி மன்ற தலைவர் ஜான்சி ராணி ராஜா, துணை தலைவர் சேகர், ஒன்றிய கவுன்சிலர் சந்துரு, சிவனடியார் கிஷோர்குமார் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.



சென்னை திருவொற்றியூர் கான் கார்டு அருகில் சுமார் 7 ஏக்கர் நிலத்தை வடசென்னை எம்பி கலாநிதி வீராசாமி நேரில் சென்று ஆய்வு மேற்கொண்டார். இந்த ஆய்வின் ஆலோசனை போது தற்காலிகமாக கேந்திர வித்யாலயா பள்ளியை ஆரம்பிப்பதற்காக பள்ளிக்குத் தேவையான கட்டிடம், தலைமை ஆசிரியர் அறை , ஆசிரியர்கள் அறை, சுமார் 10க்கும் மேற்பட்ட வகுப்பறைகள் மற்றும் கழிப்பறைகள் போன்ற வசதிகளுடன் கூடிய தற்காலிக இடம் தேவை என கேந்திர வித்யாலயா மண்டலத் தலைவர் ஸ்ரீ ருக்மணி எம்பி கலாநிதி வீராசாமியிடம் கேட்டுக்கொண்டார். தொடர்ந்து இந்த நிலத்தில் பள்ளி அமைப்பதற்கான தேவையான அனைத்தும் விரைவில் தொடங்கப்படும் எனக் கூறினர். இதைத் தொடர்ந்து இடத்தை சுத்தம் செய்து நிலத்தை அளப்பதற்கான வேலைகள் தொடங்கின. இந்த ஆய்வின்போது சிறப்பு தாசில்தார் விஜயலட்சுமி மற்றும் மண்டல அதிகாரிகள் உடன் இருந்தனர்.



ஈரோடு கிழக்கு சட்டமன்ற இடைத்தேர்தலில் போட்டியிடும் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியின் வேட்பாளர் இவிகேஎஸ் இளங்கோவனை ஆதரித்து பி.பி.அக்ரஹாரம் பகுதியில், பூத் எண் 9 இல் திமுகவின் திருவள்ளூர் மேற்கு மாவட்ட செயலாளர், திருத்தணி சட்டமன்ற உறுப்பினர் எஸ்.சந்திரன், மாவட்ட துணைச் செயலாளர் டாக்டர் வி.சி. ஆர்.குமரன் ஆகியோர் வீடுவீடாக சென்று 21 மாதங்களில் 210 சாதனைகள் அடங்கிய நோட்டீசை பொதுமக்களிடம் வழங்கி வாக்கு சேகரித்தார்கள்.

# ஈரோடு திமுக – நாம் தமிழர் கட்சியினர் இடையே கைகலப்பு

## மண்டை உடைக்கப்பட்டதால் பரபரப்பு!



*ஈரோடு, பிப். 19 –*

ஈரோடு, ராஜாஜிபுரம் பகுதியில் நாம் தமிழர் கட்சி சார்பில் திரைப்பட இயக்குநர் களஞ்சியம், மருது மக்கள் இயக்கத்தின் தலைவர் முத்துபாண்டி, நா.த.க மாநில ஒருங்கிணைப்பாளர் மணி செந்தில், நா.த.க. தொழிற்சங்கத்தின் மாநிலத் தலைவர் அன்பு தென்னரசு உள்ளிட்ட கட்சியினர் தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்டிருந்தனர்.

பா.ஜ.க பட்டியலின மாநில பொதுச்செயலாளராக இருந்து அண்மையில் தி.மு.க-வில் இணைந்த விநாயகமூர்த்தி தலைமையிலான தி.மு.க-வினர் சிலர் தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்டவர்களை தடுத்து நிறுத்தி, நாம் தமிழர் கட்சியின் ஒருங்கிணைப்பாளர் சீமான், அருந்ததியர் சமூகத்தை தரக்குறைவாக விமர்சித்ததாகவும், ‘எங்கள் பகுதியில் நீங்கள் பிரசாரம் செய்யக் கூடாது’ என்று கூறி தடுத்து நிறுத்தியதாகவும் கூறப்படுகிறது.

இதனால் இருதரப்பினரிடையே வாக்குவாதம் ஏற்பட்டது. வாக்குவாதம் முற்றிய நிலையில் தி.மு.க-வைச் சேர்ந்த சிலர் நாம் தமிழர் கட்சியினர் மீது தடியால் தாக்கியதாகச் சொல்லப்படுகிறது.

இந்தத் தாக்குதலில் தொழிற்சங்க மாநிலத் தலைவர் அன்பு தென்னரசுவின் தலையில் படுகாயம் ஏற்பட்டு ரத்தம் கொட்டியது. புதுக்கோட்டையைச் சேர்ந்த நாகசுந்தரின் முகத்திலும் காயம் ஏற்பட்டது. இதில் கொதிப்படைந்த நாம் தமிழர் கட்சியினர் அவர்களை திருப்பித் தாக்க முயன்றனர்.

அதற்குள் அவர்கள் தப்பி ஓடி விட்டதால் அங்கேயே ரோட்டில் அமர்ந்து சாலை மறியலில் ஈடுபட்டனர். தாக்குதல் நடத்தியவர்களை கைதுசெய்யக்கோரி கோஷங்களைஎழுப்பினர். காயமடைந்தவர்கள் அன்பு தென்னரசுவை ஈரோடு அரசு தலைமை மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றனர்.

இந்ததாக்குதல் குறித்து வேட்பாளர் மேனகா நவநீதன் பேசுகையில், “ஜனநாயக முறைப்படி வாக்குகளைச் சேகரிக்க வந்த எங்களை தடியால் தாக்கி அராஜகத்தில் ஈடுபட்டிருக்கின்றனர். இந்தத் தாக்குதலில் ஈடுபட்ட தி.மு.க-வைச் சேர்ந்த விநாயகமூர்த்தி உள்ளிட்ட கும்பலை போலீஸார் கைது செய்து நடவடிக்கை எடுக்க வேண்டும்" என்று தெரிவித்தார்.

இது குறித்து பேசிய டி.எஸ்.பி. ஆனந்தகுமார் பாதிக்கப்பட்டவர்கள் புகார் அளித்ததும் வழக்கு பதிவுசெய்து நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.

# நிலநடுக்கத்தால் உயிரிழந்தவர்களுக்கு வண்ணாரப்பேட்டை, சிங்காரத்தோட்டம் ரெடிமேட் வியாபாரிகள் சங்கம் சார்பில் மௌன அஞ்சலி



சென்னை, பிப். 19 –

உலகையே உலுக்கிய துருக்கி, சிரியாவில் சக்தி வாய்ந்த நிலநடுக்கத்தால் உயிரிழந்த குடும்பங்களுக்கு வண்ணாரப்பேட்டை, சிங்காரத்தோட்டம் பகுதியில் ரெடிமேட் வியாபாரி சங்கத்தினர் மலர் தூவி மெழுகுவர்த்தி ஏந்தி மௌன அஞ்சலி செலுத்தினர்

இந்த பேரழிவு நிலநடுக்கமும், அதைத் தொடர்ந்து ஏற்பட்ட அதிர்வுகளும் இரு நாடுகளையும் உலுக்கிவிட்டன. இந்த இடிபாடுகளில் லட்சக்கணக்கானோர் சிக்கியுள்ளனர்.

இந்த நிலநடுக்கம் துருக்கியில் மட்டுமே 10 மாகாணங்களில் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. தினந்தோறும் முழு வீச்சில் மீட்பு பணிகள் நடைபெற்று வந்தாலும் ஏராளமானோர் சடலமாக மீட்கப்பட்டு வருகின்றனர். குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை ஏராளமானோர் உயிரிழந்துள்ளனர்.

அவர்களின் குடும்பத்திற்கு வண்ணாரப்பேட்டை வியாபாரிகள் சங்கத் தலைவர் ஏர்ணாவூர் நாராயணன் தலைமையில் வண்ணாரப்பேட்டை, சிங்காரத்தோட்டம் ரெடிமேட் வியாபாரிகள் மலர் தூவி மௌன அஞ்சலி செலுத்தினர். பின்னர் கையில் மெழுகுவர்த்தி ஏந்தி இறந்த குடும்பத்தினருக்கு இரங்கல் தெரிவிக்கும் வகையில் அஞ்சலியில் ஈடுபட்டனர்

சிரியா மக்களுக்கு உதவுவதற்கு தயாராக இருப்பதாகவும் தமிழக அரசு அறிவித்தால் அதன் வழியில் பின்பற்றி உதவிட தயாராக இருப்பதாக வியாபாரி சங்கத் தலைவர் நாராயணன் தெரிவித்தார்.

# மயூர நாட்டியாஞ்சலி : மூன்றாம் நாள் விழா முருகனின் அறுபடைவீடு நாட்டிய நாடகம்





*மயிலாடுதுறை, பிப்- 18:*

மகாசிவராத்திரியை முன்னிட்டு மயிலாடுதுறை மாயூரநாதர் பெரிய கோவிலில் தென்னகப் பண்பாட்டு மையம், மத்திய அரசின் கலாச்சாரத்துறை மற்றும் சப்தஸ்வரங்கள் அறக்கட்டளை சார்பில் 17-ஆம் ஆண்டு மயூர நாட்டியாஞ்சலி விழா புதன்கிழமை தொடங்கி நடைபெற்று வருகிறது.

நாட்டியாஞ்சலி மூன்றாம் நாள் விழாவில் சென்னை பிரேமாலயா நாட்டிய நிகேதன் குழுவினர், கோவை சிவந்ருத்யாஞ்சலி நாட்டியப்பள்ளி குழுவினர், கோவை லாவண்யா ஷங்கர் குழுவினரின் நாட்டிய நிகழ்ச்சிகள் நடைபெற்றது.

மயிலாடுதுறை மயிலை சப்தஸ்வரங்கள் நுண்கலை பயிற்சியக குழுவினர் அறுபடைவீடு என்ற தலைப்பில் முருகனின் பிறப்புதுவங்கி மனக்கோலம் வரையில், அறுபடைவீடுகளில் புரிந்த திருவிளையாடல்கள், அவ்வை பாட்டிக்கு நாவல் பழம் அளித்த கதை, சூரபத்மனை சம்காரம் செய்தது, தந்தைக்கு ஓங்காரத்தை உபதேசம் செய்தது, வள்ளி தெய்வானை கரம் பிடித்தது உள்ளிட்ட பல்வேறு நிகழ்வுகளை நாட்டிய நாடகமாக சமர்ப்பணம் செய்தனர்.

இதேபோல், பெங்களூரு ப்ளூட் & பீட் அகாடமி குழுவினர், கோவை லாஸ்யா சித்ரா ஸ்கூல் ஆஃப் டான்ஸ் குழுவினரின் நாட்டிய நிகழ்ச்சிகள் நடைபெற்றது. மயூர நாட்டியாஞ்சலி விழாவில் கலந்துகொண்ட கலைஞர்களுக்கு சப்தஸ்வரங்கள் அறக்கட்டளை சார்பில் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் நிஷா, சட்டமன்ற உறுப்பினர் ராஜகுமார், அறங்காவலர் சிவலிங்கம் உள்ளிட்டோர் சான்றிதழும், நினைவு பரிசுகளும் வழங்கி பாராட்டினர்.

இதில் சப்தஸ்வரங்கள் அறக்கட்டளை நிர்வாகிகள், கலை ஆர்வலர்கள் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

# சென்னை திருவொற்றியூரில் தனியார் மருத்துவமனையில் தவறான அறுவை சிகிச்சையால் +1 மாணவி பலி



சென்னை, பிப். 19 –

சென்னை திருவொற்றியூர் சிவகங்காபுரம் பகுதியைச் சேர்ந்தவர் நந்தினி ( 35). இவருடைய மகள் அபிநயா (15). சென்னை இராயபுரம் தனியார் பள்ளியில் +1 படித்து வந்தார். அபிநயாவிற்கு சிறுவயதில் இருந்து காதில் சீல் வருவது வழக்கம். அவ்வப்போது அருகில் உள்ள தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று மருந்து, மாத்திரைகள் வாங்கி கொடுத்துள்ளனர்.

அபிநயாவிற்கு கடந்த சில நாட்களுக்கு முன்பு காதில் சீழ் வடிந்துள்ளது. எனவே திருவொற்றியூர் காவல் நிலையம் அருகே பிரசாத் இனன்டி மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றுள்ளனர். அங்கு மருத்துவர் கிருபாகரன் என்பவரிடம் காண்பித்துள்ளனர், பின்னர் ஸ்கேன் செய்து பார்த்ததில் மருந்து, மாத்திரையில் சரி செய்து விடலாம் என கூறி பின்னர் அவர் எழுதிக் கொடுத்த இசிஜி, எக்ஸ்ரே, பிளட் டெஸ்ட், எக்கோ டெஸ்ட், சீல் டெஸ்ட் எடுத்துள்ளனர். இதனையடுத்து அறுவை சிகிச்சை செய்ய ரூபாய் 45 ஆயிரம் செலவாகும் என கூறியுள்ளனர். கடந்த 14 ஆம் தேதி அன்று காலை 9 மணியளவில் தனது மகள் அபிநயாவை பிரசாத் இனன்டி மருத்துவமனையில் அட்மிட் செய்துள்ளனர்.

இரவு 7:15 மணியளவில் அறுவை சிகிச்சை முடிந்து வெளியே வந்த அரை மணி நேரத்திற்கு பிறகு தனக்கு நெஞ்சு அதிகமாக வலிப்பதாக தாயிடம் கூறியுள்ளார். இது குறித்து தாய் நந்தினி மருத்துவரிடம் கூறியுள்ளார். உடனடியாக மருத்துவர்கள் எக்கோ எடுத்து பார்த்து மூச்சுத் திணறல் அதிகமாக இருப்பதால் ஆக்சிஜன் வைத்துள்ளனர். இதயத்துடிப்பு அதிகமாக இருப்பதால் கிருபாகரன் மற்றும் மூன்று டாக்டர்கள் ஆலோசித்து ஆம்புலன்ஸ் மூலம் திருவொற்றியூர் தனியார் மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றுள்ளனர். அங்கு இருபது ஆயிரம் ரூபாய் பணம் கட்டிய பிறகு இரவு 1.30 மணி அளவில் தீவிர சிகிச்சை பிரிவில் அனுமதித்துள்ளனர். பின்னர் பெற்றோர் ஒப்புதல் இல்லாமல் கழுத்துப் பகுதியில் ஒரு ஊசி போட்டதாகவும், இரண்டு வெற்றுத் தாளில் கையெழுத்து வாங்கிவிட்டு அதன் பிறகு தாய் நந்தினி இடம் தனது மகள் இதயத்துடிப்பு அதிகரிப்பால் அரசு ராஜீவ் காந்தி மருத்துவமனையில் மாற்றி விடுகிறோம் எனக் கூறி டிஸ்சார்ஜ் செய்து, தனியார் ஆம்புலன்ஸ் மூலம் கடந்த 15 ஆம் தேதி அன்று ராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதித்தனர்.

அங்கு தீவிர சிகிச்சை பிரிவில் இருந்த மருத்துவர் உங்கள் மகளுக்கு காது கேட்காது என தனியார் மருத்துவமனையில் தகவல் இருக்கிறது என கூறவே, மருத்துவர்களிடம் மறுத்து காது கேட்கும் என தெரிவித்தனர். அறுவை சிகிச்சை செய்த பிறகு இதய துடிப்பு அதிகரித்ததால் இங்கு வந்து அனுமதித்தாக தெரிவித்தார்.

தீவிர சிகிச்சையில் சிகிச்சை பெற்று வந்த அபிநயா உயிரிழந்தார். இதனை அடுத்து அபிநயாவின் தாய் நந்தினி திருவொற்றியூர் காவல் நிலையத்தில் பிரசாத் இனன்டி தனியார் மருத்துவமனையில் தனது மகளுக்கு தவறான சிகிச்சை அளிக்கப்பட்டதால் இதயத்துடிப்பு அதிகரித்ததன் காரணமாக அவர் இறந்து விட்டதாகவும் தவறான சிகிச்சை அளித்த, கவனக்குறைவாக செயல்பட்ட பிரசாத் மருத்துவமனை மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என புகார் அளித்தார். புகாரின் பேரில் வழக்கு பதிவு செய்து போலீசார் உடலை கைப்பற்றி பிரேத பரிசோதனைக்காக மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.

இதனையடுத்து மருத்துவமனை மீது நடவடிக்கை எடுக்க கோரி உறவினர்கள் திருவொற்றியூர் காவல் நிலையம் முன்பு சாலை மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர். இதனால் திருவொற்றியூர் நெடுஞ்சாலையில் சுமார் அரைமணி நேரம் போக்குவரத்து பாதிப்பு ஏற்பட்டது.

தகவலின் பேரில் பூக்கடை உதவி ஆணையர் ஆல்பட் ஜான் விரைந்து வந்து சாலை மறியலில் போராட்டத்தில் ஈடுபட்டவர்களிடம் பேச்சுவார்த்தை நடத்தி உரிய நடவடிக்கை எடுப்பதாக உறுதி அளித்தார். இதனையடுத்து மறியல் போராட்டத்தை கைவிட்டனர். முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக பிரசாத் தனியார் மருத்துவமனையில் போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

# பொன்னமராவதி வட்டாரத்தில் வேளாண் வளர்ச்சித் திட்டம் குறித்த கலை நிகழ்ச்சி



பொன்னமராவதி பிப்.19-

வேளாண் உழவர் நலத்துறையின் கீழ் செயல்படுத்தப்படும் அட்மா திட்டத்தின் மூலம் பொன்னமராவதி வட்டாரம், வேகுபட்டி மற்றும் தொட்டியம்பட்டி கிராமங்களில் உமா வேளாண்மை உதவி இயக்குனர், வேணி வேளாண் அலுவலர் வழிகாட்டுதலின் கீழும், மலர்விழி உதவி வேளாண்மை அலுவலர் மற்றும் ஊராட்சி மன்ற தலைவர்கள் உதவியுடனும் வேளாண்மை மற்றும் சகோதரத்துறை சார்ந்து தெருக்கூத்து நிகழ்ச்சி வழிநடத்தப்பட்டது.

அதில் கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சி திட்டங்கள் குறித்தும், நெல் தரிசில் உளுந்து சாகுபடி தொழில்நுட்பம் குறித்தும் மக்களுக்கு கலை நிகழ்ச்சி மற்றும் தெருக்கூத்து மூலமாகவும், கிராமிய பாடல் மூலமாகவும் எடுத்துரைக்கப்பட்டது. மேலும், கலை நிகழ்ச்சியில் ஏராளமான விவசாயிகள் கலந்து கொண்டு வேளாண்மையில் புதிய தொழில்நுட்பங்களை தெரிந்து கொண்டனர்.

இந்த கலை நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை சத்தியபாமா வட்டார தொழில்நுட்ப மேலாளர் மற்றும் நவீன் குமார் மற்றும் பிரசாத் உதவி தொழில்நுட்ப மேலாளர்கள் செய்து இருந்தனர்.

# புதுக்கோட்டை ஜெ.ஜெ. கல்லூரி தகவல் தொழில் நுட்ப போட்டிகள்



புதுக்கோட்டை பிப்.19-

புதுக்கோட்டை ஜெ.ஜெ. கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் கணினி பயன்பாட்டியல் துறை மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை சார்பில் நேற்று 'கெய்ட்-2023' நிகழ்ச்சி நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் திருச்சி, சிவகங்கை, தஞ்சாவூர், புதுக்கோட்டை ஆகிய மாவட்டங்களை சார்ந்த 11 கல்லூரிகளிலிருந்து கணினி துறையைச் சார்ந்த 141 மாணாக்கர்கள் கலந்து கொண்டனர்.

கற்பக விநாயகா கல்வி அறக்கட்டளையின் அறங்காவலர் கவிதா சுப்பிரமணியன் தலைமை தாங்கினார். விழா நிறைவில் ஜெ.ஜெ. கல்லூரி முதல்வர் பரசுராமன் நிறைவுரையாற்றி பரிசு வழங்கினார். நிகழ்ச்சியில் கலந்து கொண்ட மாணவர்களுக்கு ஐந்து போட்டிகள் நடத்தப்பட்டன. ஒவ்வொரு போட்டியிலும் முதல் மூன்று இடங்களைப் பிடித்த கல்லூரிகளுக்கு இடத்திற்கேற்ப புள்ளிகள் வழங்கப்பட்டது. போட்டிகளில் கலந்து கொண்டு வெற்றி பெற்றவர்களுக்கு சான்றிதலோடு ரொக்க பரிசும் வழங்கப்பட்டது.

வினாடி வினா போட்டியில் முதல் பரிசு திருப்பத்தூர் ஆறுமுகம் பிள்ளை சீதையம்மாள் கல்லூரி, இரண்டாம் பரிசு மற்றும் மூன்றாம் பரிசு பேராவூரணி அரசு கலைக் கல்லூரி ஆகியவையும், ஆச்சர்ய நிகழ்வில் முதல் பரிசு புதுக்கோட்டை மாமன்னர் அரசு கலைக்கல்லூரி, இரண்டாம் பரிசு பேராவூரணி அரசு கலைக்கல்லூரி, மூன்றாம் பரிசு காரைக்குடி அழகப்பா அரசு கலைக்கல்லூரி ஆகியவையும், மௌன நாடகத்தில் முதல் பரிசு திருப்பத்தூர் ஆறுமுகம் பிள்ளை சீதையம்மாள் கல்லூரி, இரண்டாம் பரிசு தஞ்சாவூர் பான்செக்கர்ஸ் மகளிர் கல்லூரி, ஆலங்குடி அற்புதா மகளிர் கலை அறிவியல் கல்லூரி ஆகியவையும், பொருள் விளம்பரத்தில் முதல் பரிசு திருப்பத்தூர், ஆறுமுகம் பிள்ளை சீதையம்மாள் கல்லூரி, இரண்டாம் பரிசு ஆலங்குடி அற்புதா மகளிர் கலை அறிவியல் கல்லூரி, மூன்றாம் பரிசு புதுக்கோட்டை மாமன்னர் அரசு கலைக்கல்லூரி ஆகிய கல்லூரிகலும், தவறு திருத்தத்தில் முதல் பரிசு புதுக்கோட்டை மாமன்னர் அரசு கலைக்கல்லூரி (தன்னாட்சி), இரண்டாம் பரிசு காரைக்குடி அழகப்பா அரசு கலைக்கல்லூரி, மூன்றாம் பரிசு திருப்பத்தூர், ஆறுமுகம் பிள்ளை சீதையம்மாள் கல்லூரி ஆகியவையும் முதல் மூன்று இடங்களை பெற்றன.

இதனையடுத்து, அனைத்து போட்டிகளிலும் கூடுதல் புள்ளி பெற்று முதலிடம் பெற்ற திருப்பத்தூர், ஆறுமுகம் பிள்ளை சீதையம்மாள் கல்லூரி மாணவர்கள் சாம்பியன் கோப்பையைத் தட்டிச் சென்றனர்.

முன்னதாக கணினி பயன்பாட்டியல் துறை தலைவர் சதிஷ் விழாவின் துவக்கத்தில் வரவேற்புரை வழங்கினார். இறுதியில் தகவல் தொழில்நுட்பவியல் துறை தலைவர் மணிமாறன் நன்றியுரை வழங்கினார். நிகழ்ச்சியை, இரண்டு துறைத்தலைவர்கள் மற்றும் பேராசிரியர்களும் சிறப்பாக ஏற்பாடு செய்திருந்தனர்.

# கறம்பக்குடி அருகே அரசு பள்ளி மாணவர்களை சுற்றுலா அழைத்து சென்ற ஆசிரியர்களுக்கு நோட்டீஸ்



கறம்பக்குடி பிப்.19-

புதுக்கோட்டை மாவட்டம், கறம்பக்குடி அருகே உள்ள கரு.தெற்கு தெரு கிராமத்தில் அரசு நடுநிலைப் பள்ளி செயல்பட்டு வருகிறது. இந்தப் பள்ளியில் சுமார் 150 மாணவ மாணவிகள் பயின்று வருகின்றனர். தலைமையாசிரியர் உள்பட 6 ஆசிரியர்கள் இந்தப் பள்ளியில் பணிபுரிந்து வருகின்றனர். இந்நிலையில் மாணவ மாணவிகளை அழைத்துக் கொண்டு ஆசிரியர்கள் அனைவரும் வேளாங்கண்ணிக்கு கல்வி சுற்றுலா சென்றனர். இதற்கு கல்வித் துறையின் அனுமதியை பெறவில்லை என கூறப்படுகிறது. இந்நிலையில் அப்பகுதியில் சென்றவர்கள் வேலை நாளில் பள்ளிக்கூடம் பூட்டப்பட்டிருப்பதை அறிந்து விசாரித்தனர்.

அப்போது மாணவர்களை ஆசிரியர்கள் கல்வி சுற்றுலா அழைத்துச்சென்றதும் அதற்கு உரிய அனுமதி பெறவில்லை என்பதும் தெரியவந்தது. இது குறித்த செய்தி சமூக வலைதளங்களில் வைரலாகியது. இதனையடுத்து சுற்றுலா சென்ற மாணவர்களை ஆசிரியர்கள் அவசரமாக ஊருக்கு அழைத்து வந்தனர். இதற்கிடையே அனுமதி இல்லாமல் மாணவர்களை சுற்றுலா அழைத்து சென்றது குறித்து தலைமையாசிரியர், ஆசிரியர்கள் மற்றும் கறம்பக்குடி வட்டார கல்வி அலுவலர் என மொத்தம் 7 பேருக்கு அறந்தாங்கி மாவட்ட தொடக்க கல்வி அலுவலர் சண்முகம் விளக்கம் கேட்டு நோட்டீஸ் அனுப்பியுள்ளார்.

கரூர் மாவட்டம், மாயனூர் காவிரி ஆற்றில் மூழ்கி புதுக்கோட்டை மாவட்டம் பிலிப்பட்டியை சேர்ந்த 4 மாணவிகள் உயிரிழந்துள்ள நிலையில் கரு.தெற்கு தெரு அரசு நடுநிலைப் பள்ளி மாணவ மாணவிகளை அனுமதியின்றி கடல் பகுதிக்கு அழைத்துச் சென்றது விமர்சனத்திற்கு உள்ளாகி உள்ளது.

# ஜார்க்கண்ட் மாநிலத்தின் புதிய கவர்னராக சி.பி.ராதாகிருஷ்ணன் பதவியேற்பு



ஜார்க்கண்ட் பிப்.19-

தமிழ்நாடு பாஜக மூத்த தலைவராக செயல்பட்டு வந்தவர் சி.பி.ராதாகிருஷ்ணன். இவரை ஜார்க்கண்ட்டின் புதிய கவர்னராக நியமித்து ஜனாதிபதி கடந்த 12-ஆம் தேதி உத்தரவிட்டார். இதனை தொடர்ந்து பாஜகவின் அனைத்து பொறுப்புகளில் இருந்தும் கடந்த 15-ஆம் தேதி சி.பி.ராதாகிருஷ்ணன் ராஜினாமா செய்தார். மேலும், அவர் கவர்னராக பொறுப்பேற்க ஜார்க்கண்ட் சென்றார்.

இந்நிலையில், ஜார்க்கண்டின் புதிய கவர்னராக சி.பி. ராதாகிருஷ்ணன் நேற்று பொறுப்பேற்றுக்கொண்டார். ஜார்க்கண்ட்டின் 11-வது கவர்னராக சி.பி. ராதாகிருஷ்ணன் பொறுப்பேற்றுக் கொண்டார். அவருக்கு ஜார்க்கண்ட் உயர்நீதிமன்ற பொறுப்பு நீதிபதி பதவி பிரமாணம் செய்து வைத்தார். இந்த பதவியேற்பு நிகழ்ச்சியில் முதலமைச்சர் ஹெமந்த் சோரன், அமைச்சரவை மந்திரிகள், எம்.பி.க்கள் மற்றும் எம்.எல்.ஏ.க்கள் உடன் இருந்தனர்.

# தமிழக அரசுக்கு தமாகா விவசாய அணி கோரிக்கை

கறம்பக்குடி பிப்.19-

புதுக்கோட்டை மாவட்டம் வெள்ளாளவிடுதியில் அமைந்துள்ள தமிழ்நாடு அரசு வேளாண் வித்து பண்ணையில் பல வருடங்களாக தினக்கூலியாக வேலை பார்த்து வந்த சுமார் 46 நபர்களை வயதை காரணம் காட்டி திடீரென வேலையை விட்டு நிறுத்தியது வேதனையளிக்கிறது.

முன்னறிவிப்பு இன்றி வேலையை விட்டு நிறுத்தியது தொழிலாளர்கள் வாழ்வாதாரத்தை பாதிக்கும் செயலாகும். பண்ணையில் வேலை பார்க்கும் அரசு வேளாண் அதிகாரிகள் முறையே முன் அறிவிப்பு கொடுத்து வேலையை விட்டு நிறுத்தியிருக்க வேண்டும். தமிழக அரசு மீண்டும் தின கூலி தொழிலாளர்களுக்கு வேலை வழங்கிட வேண்டும் என தமாகா விவசாய அணி தலைவர் துவார் சி.ரெங்கராஜன் கோரிக்கைவிடுத்துள்ளார்.

# மதுரையில் உள்ள ரேஸ் கோர்ஸ் மைதானத்தில் இளையோர் தடகளப் போட்டி



மதுரை பிப்.19-

கல்விக் குழுமம் மற்றும் "தமிழ்நாடு தடகளப் போட்டி சங்கம்" இணைந்து பிப்.15 மற்றும் பிப்.16 ஆகிய இரண்டு நாட்கள் மதுரையில் உள்ள ரேஸ் கோர்ஸ் மைதானத்தில் "இளையோர் தடகளப் போட்டிகளை" நடத்தியது.

இதில் 15 மாவட்டங்களில் இருந்து 1500 மாணவர்களுக்கு மேல் கலந்து கொண்டனர். நிலை வாரியாக நடைபெற்ற இப்போட்டியை, மதுரை மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் கார்த்திகா, மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ராதாகிருஷ்ணன், மாநில நேரு யுவகேந்த்ரா சங்கத்தின் தலைவர் செந்தில்குமார் மற்றும் காவல் ஆய்வாளர் எஸ்தர் கலந்து கொண்டு போட்டிகளை தொடங்கி வைத்தனர்.

மேலும் மதுரை மாவட்ட நீதிமன்ற நடுவர் அனுராதா, தனியார் பள்ளி கல்வி அலுவலர் கோகிலா, காவல் ஆய்வாளர் மலர்விழி, மதுரை சமூக அறிவியல் கல்லூரி செயலாளர் தர்மாசிங் கல்விக் குழுமப் பள்ளிகளின் தலைவர் செந்தில்குமார் மற்றும் தாளாளர் குமரேஷ் முன்னின்று விழாவினைச் சிறப்பித்தனர். மேலும் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசும் பாராட்டுச் சான்றிதழும் வழங்கி கௌரவிக்கப்பட்டது.

# நெல் கொள்முதல் நிலைய முறைகேடுகளில் ஈடுபடுவது தெரியவந்தால், பணியாளர்கள் பணி நீக்கம்

## தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் எச்சரிக்கை



சென்னை பிப்.19-

முறைகேடுகளில் ஈடுபடுவது தெரியவந்தால், பணியாளர்கள் பணிநீக்கம் செய்யப்படுவார்கள் என தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் எச்சரித்துள்ளது.

நேரடி நெல்கொள்முதல் நிலையங்களில், விவசாயிகளிடம் கையூட்டு பெறுவதாக புகார்கள் வருவதை கண்காணித்து நடவடிக்கைஎடுக்கப்பட்டு வருகிறது. முந்தைய மாதங்களில் இதுபோன்ற வரப்பெற்ற புகார்களின் அடிப்படையில் ஆய்வு செய்ததில், முறைகேட்டில் ஈடுபட்ட 90 நேரடி நெல் கொள்முதல் நிலைய பணியாளர்கள் கடந்த வாரம் நிரந்தரமாக பணி நீக்கம்செய்யப்பட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

தற்போது டெல்டா மாவட்டங்களில் கூடுதல் பதிவாளர் தலைமையில் 9 விழிப்பு பணிக்குழு அதிகாரிகள் நியமிக்கப்பட்டு அதிரடி ஆய்வுசெய்யப்பட்டுள்ளது. மாவட்ட அளவில் பணிபுரியும் அலுவலர்களுக்கும் கள ஆய்வுகள் மேற்கொண்டு கண்காணிப்பு பணியை தீவிரப்படுத்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. ஆய்வில், முறைகேடுகளில் ஈடுபடுவது தெரியவந்தால், பணியாளர்கள் பணிநீக்கம் செய்யப்படுவார்கள் என்று, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் எச்சரிக்கைவிடுத்துள்ளது.

# அதானி குழுமத்தின் மீது மேலும் ஒரு குற்றச்சாட்டு போர்ப்ஸ் பத்திரிகை அறிக்கை



டெல்லி பிப்.19-

அதானி குழுமத்தின் மற்றொரு முறைகேட்டை போர்ப்ஸ் பத்திரிகை அறிக்கையாக வெளியிட்டுள்ளது.

அதானி குழுமம் மீதான பங்குச்சந்தை மோசடி தொடர்பாக அமெரிக்காவை சேர்ந்த ஹிண்டன்பர்க் ஆய்வு நிறுவனம் அறிக்கை வெளியிட்டது. இது அதானி குழுமத்துக்கு பெரும் பின்னடைவை ஏற்படுத்தியுள்ளது. இந்த நிலையில் கவுதம் அதானியின் மூத்த சகோதரரான வினோத் அதானி, சிங்கப்பூரைச் சேர்ந்த நிறுவனங்களின் மூலம்ரஷியவங்கியில்கடன் பெற்று முறைகேட்டில் ஈடுபட்டதாக போர்ப்ஸ் குற்றம் சாட்டியுள்ளது. அதானி குழுமத்துடன் தொடர்புடைய வெளிநாட்டுநிறுவனங்கள் வினோத் அதானி மேற்பார்வையில் இயங்கி வருகின்றன. துபாய், சிங்கப்பூர்,இந்தோனேசியா ஆகிய நாடுகளிலிருந்து அதானி குழுமத்துடன் தொடர்புடைய பிற நிறுவனங்களின் சர்வதேச வணிகத்தை வினோத் அதானி கவனித்து வருகிறார். இந்தியாவில் தங்கி வணிகம் செய்யாத பணக்கார இந்தியர்களின் பட்டியலில் முதன்மையான இடத்தில் வினோத் அதானி உள்ளார்.

வினோத் அதானியின் மறைமுககட்டுப்பாட்டில் சிங்கப்பூரைச் சேர்ந்த வணிகம் மற்றும் முதலீட்டு நிறுவனமான 'பினாக்கிள்' செயல்பட்டு வருகிறது. இந்த நிறுவனத்தின் மூலம் கடந்த 2020-ஆம் ஆண்டு ரஷ்யாவைச் சேர்ந்த விடிபி வங்கியில் வினோத் அதானி கடன் பெற்றுள்ளார். இந்தக் கடன் உக்ரைன் - ரஷ்யா போரின் போது 2021 ஏப்ரலில் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. 'பினாக்கிள்' நிறுவனம் கடனாகப் பெற்ற 263 மில்லியன் டாலர்களில் 258மில்லியன் டாலர்களை பெயரிடப்படாத பங்குகளுக்காக ஒதுக்கியுள்ளதாக போர்ப்ஸ் அறிக்கை வாயிலாக குற்றம் சாட்டியுள்ளது. ரஷ்ய வங்கியிருலிருந்து பெற்ற கடன் தொகைக்கான உத்தரவாதமாக ஆப்ரோ ஏசியா மற்றும் வேர்ல்ட்வைட் ஆகிய இரு நிறுவனங்களைபினாக்கிள் குறிப்பிட்டுள்ளது. இந்த இரு நிறுவனங்களும் அதானி குழுமத்தின் பங்குதாரர்களுக்குச் சொந்தமானது என்று போர்ப்ஸ் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# அரிமளம் அருகே ஓணாங்குடி அரசு பள்ளியில் முப்பெரும் விழா



அரிமளம் பிப்.19-

புதுக்கோட்டை மாவட்டம், அரிமளம் அருகே ஓணாங்குடி ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில், கலைத் திருவிழாவில் மாநில அளவில் பங்கு பெற்றவர்களுக்கு மற்றும் விளையாட்டு போட்டிகளில் வென்றவர்களுக்கு பரிசளிப்பு விழா மற்றும் பள்ளி ஆண்டு விழா என்ற முப்பெரும் விழா பள்ளி வளாகத்தில் நடைபெற்றது. இதில் ஓணாங்குடி ஊராட்சி மன்ற தலைவர் முருகேசன் தலைமை வகித்தார். வட்டார கல்வி அலுவலர்கள் நிலவழகன், அரங்கநாதன் ,வட்டார வளமைய மேற்பார்வையாளர் சுகன்யா ஆகியோர் முன்னிலையில், அரிமளம் ஒன்றிய பெருந்தலைவர் மேகலா முத்து கலந்து கொண்டு வெற்றி பெற்ற மாணவ மாணவியருக்கு பரிசுகளை வழங்கி விழா பேருரை நிகழ்த்தினார். இதில் துணை தலைவர் அண்ணாமலை,பெற்றோர் ஆசிரியர் கழக தலைவர் கோபாலகிருஷ்ணன், ஊராட்சி உறுப்பினர்கள் பாத்திமா, ராஜபாண்டியன்,மல்லிகா, அபிநயா உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

முன்னதாக பள்ளி தலைமை ஆசிரியை விஜயலட்சுமி அனைவரையும் வரவேற்றார். பட்டதாரி ஆசிரியர் சோமு ஆண்டறிக்கை வாசித்தார். பிறகு பள்ளி, மாணவர்களின் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றது. இதற்கான ஏற்பாடுகளை பள்ளி ஆசிரியர்கள் செய்தனர்.

# புதுக்கோட்டை சுயம்புலிங்க பெரியநாயகி அம்பாள் கோவிலில் மாசி மாத சனி பிரதோஷ விழா



புதுக்கோட்டை பிப்.19-

புதுக்கோட்டை மாவட்டத்தில் புகழ்பெற்ற சுயம்புலிங்க பெரியநாயகி அம்பாள் உடன் உரை அரங்குலநாதர் கோவில் உள்ளது. இக்கோவிலில் மாசி மாத சனி பிரதோஷ விழாவை முன்னிட்டு சிவன் சன்னதியில் உள்ள நந்தியம் பெருமானுக்கு பால், தயிர், சந்தனம், மஞ்சள் உள்ளிட்ட ஒன்பது வகையான அபிஷேக ஆராதனைகள் நடைபெற்று மலர் அலங்காரம் செய்து சிவாச்சாரியார்கள் வேத மந்திரங்கள் முழங்க மகா தீபம் காட்டப்பட்டது. முன்னதாக மூலஸ்தானத்தில் உள்ள சுயம்புலிங்கசிவபெருமான் பெரியநாயகி அம்பாளுக்கு சிறப்பு வழிபாடுகள் நடைபெற்றது.

தொடர்ந்து காளை வாகனத்தில்சிவபெருமாள் எழுந்தருளச்செய்து மூன்று முறை பக்தர்கள் சிவ சிவ ஹர ஹர கோஷத்துடன் பிரகார விழா நடைபெற்றது. இதேபோல் காசிக்கு விஷம் கூட என்று அழைக்கப்படும் திருவுடையார்பட்டி திருமூலநாதர், திரிபுரசுந்தரி அம்பாள் கோவில் திருக்கட்டளைசோமசுந்தர ஈஸ்வரர், மங்களநாயகி அம்பாள் கோவில், திருமலைராய சமுத்திரம், கதிர்காமேஸ்வரர், கதிர்காமேஸ்வரி அம்பாள் கோவில், பாளையூர் பழங்கரை புராதன ஈஸ்வரர் கோவில், விஜயரங்கநாதபுரம் சிவன் கோவில் ஆகிய இடங்களில் பிரதோஷ விழா நடைபெற்றது. ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு தரிசனம் செய்தனர். இதனைத் தொடர்ந்து பக்தர்களுக்கு பிரசாதம் வழங்கப்பட்டது.

# உணவுப்பாதை புற்று நோயால் பாதிக்கப்பட்ட வாலிபருக்கு நுண்துளை அறுவை சிகிச்சை – மதுரை அப்போலோ மருத்துவமனை சாதனை



மதுரை பிப்.19-

மதுரை அப்போலோ மருத்துவமனையில் உணவுப்பாதை புற்று நோயால் பாதிக்கப்பட்ட நபருக்கு நுண்துளை அறுவை சிகிச்சை மூலம் புற்றுநோய் கட்டி அகற்றப்பட்டது. இது குறித்து நடைபெற்ற செய்தியாளர்கள் சந்திப்பில் புற்றுநோய் அறுவைசிகிச்சை நிபுணர் பாலுமகேந்திரா கூறியதாவது, மதுரையைச் சேர்ந்த 28 வயது நபருக்கு உணவு விழுங்க முடியாமல் சிரமப்பட்டு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். அவருக்கு அப்போலோ மருத்துவர்கள் பரிசோதனை செய்ததில் உணவு குழாய் புற்றுநோய் இருப்பது கண்டறியப்பட்டது. வழக்கமாக நடைபெறும் உணவுக்குழாய் புற்றுநோய் அறுவை சிகிச்சைக்கு பின் நோயாளிக்கு அதிக வலி நுரையீரல் தொற்று உள்பட பல்வேறு சிரமங்கள் ஏற்படுவதை தவிர்க்கும் வகையில் இந்த நபருக்கு நுண் துளை அறுவை சிகிச்சை மூலம் புற்றுநோய் கட்டி வெற்றிகரமாக அகற்றப்பட்டது. சிறப்பான இச்சிகிச்சை நடைபெற்ற மறு தினமே இவர் வழக்கம் போல் மூச்சுப் பயிற்சி, நடைபயிற்சி உள்பட தனது அன்றாட வேலைகளை வலியின்றி சகஜமாக செய்து வந்தார். மேலும் அறுவை சிகிச்சை செய்த ஒரே வாரத்தில் மருத்துவமனையில் பூரண குணமடைந்து மருத்துவமனையில் இருந்து டிஸ்சார்ஜ் செய்யப்பட்டார் என கூறினார்.

மேலும் இது குறித்து அப்போலோ நிறுவனத்தின் மதுரை மண்டல சிஓஒ நீலக்கண்ணன் பேசுகையில் மதுரை அப்போலோ மருத்துவமனையில் புற்றுநோய் சிகிச்சைகளுக்கான முழுமையான மருத்துவக் குழுவின் கண்காணிப்பில் சிறப்பான சிகிச்சைகள் தொடர்ந்து நடைபெற்று வருவதுடன் நோயாளிகள் பயன் அடையும் வகையில் அதிநவீன கருவிகள் கொண்டு வரப்பட உள்ளன. இதனால் தென் தமிழக புற்றுநோயாளிகள் உலகத்தரம் வாய்ந்த சிகிச்சையை அருகிலேயே பெற முடியும் எனக் கூறினார். மேலும் இந்நிகழ்ச்சியில் அப்போலோ மருத்துவமனை மருத்துவர்கள் தேவானந்த், சதீஷ், ஸ்ரீனிவாசன், பிரவீன் ராஜன், உள்பட மருத்துவ குழு நிபுணர்கள் சேகர், ராஜேஷ் பிரபு, சுரேஷ்குமார், ஐயப்பன், கணேஷ், பிரவீன் குமார், பிரபு, மற்றும் மார்க்கெட்டிங் பிரிவு பொது மேலாளர் மணிகண்டன், செயல்பாடுகள் பொது மேலாளர் நிக்கில் திவாரி, பிரேம் டேனியல் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

Owned & Published by **S.Sivasakthivel**, Published From : Plot No. 1103, Periyar Nagar, Rajagopalapuram Post, Pudukkottai, and Printed By: **K.selvaraj** Printed at: Jayam Offset Printers, 5623, South 4th Street, Pudukkottai. Editor: **S.Sivasakthivel**. Phone:04322-261577.
**Chennai Office: Chief Reporter S.Kadar Hussain,** ISR MEDIA ONE, Old no:112, New no:235, 4th floor, Angappa Naicken Street, Parrys, Chennai-600 001. (Near GT Court Way). PH-9840728971. E-Mail:pudugaivaralaru@gmail.com, pudugaivaralaru2@gmail.com, pontimesrep@gmail.com

# ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தலில் வாக்குச்சாவடி பாதுகாப்பு காவலர்களுக்கு வாக்குச்சாவடி மையம் ஒதுக்கீடு



ஈரோடு, பிப். 19 –
ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தல் வரும் 27-ந்தேதி நடைபெற உள்ளதையொட்டி சட்டமன்ற தொகுதியில் 238 வாக்குச்சாவடிகள் அமைக்க ப்பட்டுள்ளது.

தேர்தலையொட்டி ஈரோடு கிழக்கு சட்டமன்ற தொகுதியில் 105 ஏட்டுகள், 51 முதல் நிலை போலீசார் மற்றும் 82 போலீசார் என மொத்தம் 238 போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபட உள்ளனர். இதையொட்டி ஈரோடு மாவட்ட கலெக்டர் அலுவலக கூட்டரங்கில் வாக்குப்பதிவு நாளான வரும் 27-ந் தேதி கிழக்கு தொகுதியில் உள்ள வாக்குப்பதிவு மையங்களில் பாதுகாப்பு பணியில் ஈடுபடும் போலீசாருக்கான வாக்குச்சாவடி மையம் ஒதுக்கீடு செய்யும் பணியினை இணையதளத்தின் மூலம் கணினி சுழற்சி முறையில் தொடங்கி வைக்கப்பட்டது.

இந்த பணி தொகுதி காவல் பார்வையாளர் சுரேஷ்குமார் சதீவ், மாவட்ட வருவாய் சந்தோஷினி சந்திரா, போலீஸ் சூப்பிரண்டு சசிமோகன் ஆகியோர் முன்னிலையில் இந்திய தேர்தல் ஆணையத்தின் இணைய தளத்தின் மூலம் தொடங்கி வைக்கப்பட்டது.

இதில் மாவட்ட கலெக்டரின் நேர்முக உதவியாளர் (பொது) கணேஷ், தாசில்தார் (தேர்தல்) சிவகாமி, கணினி நிரலாளர் வெங்கடேஷ் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

# புனித தெரசா சிறார் இல்லத்தில் பள்ளி மாணவிகளுக்கு சிறப்பு கண் மருத்துவ முகாம்





தரங்கம்பாடி, பிப்- 19;
மயிலாடுதுறை மாவட்டம் தரங்கம்பாடி தாலுகா டேனிஷ் கோட்டை அருகே அமைந்துள்ள புனித தெரசா சிறார் இல்லத்தில் புதியபாதை அறக்கட்டளை, திலகம் பெண்கள் வாழ்வுரிமை சங்கம் மற்றும் டாக்டர் அகர்வால் கண் மருத்துவமனை இணைந்து பள்ளி மாணவிகளுக்கு சிறப்பு கண் மருத்துவ முகாம் நடைபெற்றது.

தரங்கம்பாடி பேரூராட்சி தலைவர் சுகுண சங்கரி குமரவேல் தலைமையில் நடைபெற்ற இந்த மருத்துவ முகாமில் சிறப்பு விருந்தினர்களாக முன்னாள் காவல் துறை அதிகாரி அனுசியா ஏர்லெஸ்ட் டெய்ஸி, மயிலாடுதுறை முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் பால அருள்செல்வன், பேரூராட்சி துணைத் தலைவர் பொன். ராஜேந்திரன், சமூக சேவகர் டாக்டர் ஏ.கே.சந்துரு, புதுகை வரலாறு நாளிதழ் சென்னை பதிப்பின் தலைமை செய்தி ஆசிரியர் சு.காதர் உசேன் உள்ளிட்டோர் கலந்து கொண்டு மாணவர்களிடையே கண்களின் முக்கியத்துவம் குறித்து உரையாடினர்.

அதன்பின்பு தரங்கம்பாடி பேரூராட்சி தலைவர் சுகுண சங்கரி குமரவேல் உள்ளிட்ட சிறப்பு விருந்தினர்கள் முன்னிலையில் கண் மருத்துவ முகாம் தொடங்கப்பட்டது

இந்த சிறப்பு கண் மருத்துவ முகாமில் டாக்டர் அகர்வால் மருத்துவர் முகேஷ், தலைமையில் மருத்துவ குழுவினர் திலகம் பெண்கள் வாழ்வுரிமை சங்கம் மற்றும் பள்ளி மாணவிகள் உள்ளிட்ட 500 - க்கும் மேற்பட்ட மாணவிகள் கலந்துகொண்டு கண் பரிசோதனை செய்து கொண்டனர்.

இதற்கான ஏற்பாடுகளை புதிய பாதை அறக்கட்டளை நிறுவனர் அன்பு ரகோத், திலகம் பெண்கள் வாழ்வுரிமை சங்க தலைவர் வெரோனிகா உள்ளிட்டோர் செய்திருந்தனர்.

# வேலூர் ஆவினில் தயிர் விநியோகிக்காமல் அலட்சியமாக செயல்பட்ட துணை மேலாளர் பணி இடை நீக்கம்




வேலூர், பிப். 19 –
வேலூர் மாவட்டம், சத்துவாச்சாரியிலுள்ள ஆவின் பால் பண்ணையில் இருந்து வேலூர், திருப்பத்தூர், இராணிப்பேட்டை உள்ளிட்ட மாவட்டங்களுக்கு பால் மற்றும் தயிர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

நாளொன்றுக்கு சுமார் 5,000 லிட்டர் தயிர் மட்டுமே விநியோகம் செய்யப்பட்டு வரும் நிலையில் கடந்த 12-ம் தேதி உற்பத்தி செய்யப்பட்ட தயிர் பாக்கெட்டுகளை முகவர்களுக்கு விநியோகிக்கவில்லை. இதனால் பொதுமக்கள் மற்றும் முகவர்கள் அவதிக்குள்ளாகினர்.

இதுகுறித்து வேலூர் ஆவின் பொது மேலாளர் ரவிக்குமார் விசாரணை மேற்கொண்டார். விசாரணையில், தயிர் தாமதமான அன்றைய தினம் பணியில் இருந்தது துணை மேலாளர் உமா மகேஸ்வரராவ் என்பதும் தெரியவந்தது, அவரது பணி அலட்சியம் காரணமாக தயிர் மற்றும் மோர் விநியோகிப்பதில் சிக்கல் ஏற்பட்டதாக தெரியவந்தது.

இதனையடுத்து ஆவின் துணை மேலாளர் உமா மகேஸ்வரராவை பணியிடை நீக்கம் செய்து ஆவின் பொது மேலாளர் உத்தரவிட்டுள்ளார்.

# கூடங்குளம் அருகே காதல் திருமணம் செய்த இளம் பெண் கடத்தல்



நெல்லை பிப்.19–
நெல்லை மாவட்டம் கூடங்குளம் அருகே உள்ள ஸ்ரீரெங்கநாராயணபுரத்தை சேர்ந்த தங்கராஜா-சுகந்தி தம்பதியரின் மகன் முருகன் (24). டிப்ளமோ படித்துள்ள இவர் கூடங்குளம் அணுமின் நிலையத்தில் தனியார் ஒப்பந்த நிறுவனத்தில் மேற்பார்வையாளராக பணியாற்றி வருகிறார். இவரது பக்கத்து வீட்டைச் சேர்ந்த முருகேசன்-பத்மா தம்பதியரின் மகள் சுமிகா(19). இவர் நாகர்கோவிலில் உள்ள ஒரு கல்லூரியில் பி.காம். 2-ம் ஆண்டு படித்து வருகிறார். முருகன், சுமிகா இருவரும் கடந்த 5 ஆண்டுகளாக காதலித்து வந்தனர். இவர்களது காதல் விவகாரம் தெரியவரவே அதற்கு சுமிகாவின் பெற்றோர் கடும் எதிர்ப்பு தெரிவித்தனர்.

இதனையடுத்து கடந்த மாதம் 18- ந் தேதி காதலர்கள் இருவரும் வீட்டை விட்டு வெளியேறினர். அவர்கள் சென்னையில் பதிவு திருமணம் செய்து கொண்டதாக கூறப்படுகிறது. இதற்கிடையே சுமிகாவின் தந்தை முருகேசன் தனது மகளை காணவில்லை என்று கூடங்குளம் காவல் நிலையத்தில் புகார் அளித்தார். அதன்பேரில் காவல்துறையினர் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வந்தனர்.

மேலும் முருகேசன் தனது மகளை கண்டுபிடித்துதருமாறு மதுரை உயர்நீதிமன்ற கிளையில் ஆட்கொணர்வு மனு ஒன்றை தாக்கல் செய்தார். இதையடுத்து முருகன், சுமிகா இருவரையும் காவல்துறையினர் மீட்டு மதுரை உயர்நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தினர். அப்போது அவர்கள், தாங்கள் திருமணம் செய்து விட்டதாக வாக்குமூலம் அளித்து சேர்ந்து வாழ்வதாக தெரிவித்தனர். இதையடுத்து முருகன், சுமிகா இருவரும் கூடங்குளத்தில் வீடு எடுத்து தங்கியிருந்து வந்தனர். இந்நிலையில் கடந்த வியாழன் இரவு அவர்கள் ஸ்ரீரெங்கநாராயணபுரத்தில் உள்ள வீட்டுக்கு வந்தனர். இதை அறிந்த சுமிகாவின் பெற்றோர் மற்றும் உறவினர்கள் அங்கு வந்து சுவிகாவை தாக்கி இழுத்துச் சென்று காரில் ஏற்றி கடத்தி சென்றதாக கூறப்படுகிறது. அதை தடுத்த முருகனின் பெற்றோரை அவர்கள் அவதூறாக பேசி தாக்கியதாகவும் தெரிகிறது.

இதுகுறித்து முருகன் கூடங்குளம் காவல் நிலையத்தில் புகார் செய்தார். அதன்பேரில் சுமிகாவின் தந்தை முருகேசன், தாய் பத்மா உள்பட 12 பேர் மீது காவல்துறையினர் வழக்குப்பதிவு செய்தனர். அதில் 5 பேர் கைது செய்யப்பட்டனர். மற்றவர்களை தேடி வருவதுடன் சுமிகாவை மீட்கவும் நடவடிக்கை எடுத்து வருகிறார்கள். இந்த சம்பவம் கூடங்குளம் பகுதியில் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.




தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தலைமைச் செயலகத்தில் முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தக துறை சார்பில் சுமார் 4.98 ஏக்கர் நிலப்பரப்பளவில் மினி டைட்டில் பூங்கா அமைப்பதற்கு சுமார் 30 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள கட்டிடத்திற்கு அடிக்கல் நாட்டினார். இந்த நிகழ்ச்சியில் நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன், தொழில் முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, தலைமைச் செயலாளர் வெ.இறையன்பு, தொழில் முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் ச.கிருஷ்ணன், அரசு உயர் அதிகாரிகள் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



புதுவை அரசு காரைக்கால் மாவட்ட நிர்வாகம் சார்பில் சிந்தனை சிற்பி சிங்காரவேலரின் பிறந்த தினத்தை முன்னிட்டு நேற்று காலை மதகடியில் அமைந்துள்ள அன்னாரின் திரு உருவச் சிலைக்கு போக்குவரத்து துறை அமைச்சர் சந்திர பிரியங்கா தலைமையில் அன்னாரின் திருவுருவ சிலைக்கு மாலை அணிவித்து மலர்தூவி மரியாதை செலுத்தினார். இந்நிகழ்வில் முதுநிலை காவல் கண்காணிப்பாளர்லோகேஸ்வரன், துணை மாவட்ட ஆட்சியர் பாஸ்கரன் காவல் கண்காணிப்பாளர் (தெற்கு) சுப்பிரமணியன் மற்றும் செய்தி மற்றும் விளம்பரத்துறை உதவி இயக்குனர் குலசேகரன் மற்றும் அரசு அதிகாரிகள் மீனவ பஞ்சாயத்தார்கள், சமாதான கமிட்டி உறுப்பினர்கள் முக்கிய பிரமுகர்கள் கலந்து கொண்டு மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தினார்கள்.

# வேலூர் குடியாத்தத்தில் இந்திய குடியரசு கட்சி சார்பில் ஆர்ப்பாட்டம்



வேலூர், பிப். 19 –
வேலூர் மாவட்டம், குடியாத்தம் தாலுகா, கல்லேரி கிராமத்தில் தலித்களுக்காக வழங்கப்பட்ட 230 வீட்டுமனைபட்டாவினை அளந்து கல் நட்டும், குடியிருப்புக்கு பாதை அமைக்க வேண்டியும் மற்றும் புதுக்கோட்டை மாவட்டம்வேங்கைவயல் கிராமம் தலித் குடியிருப்பு நீர்த்தேக்க தொட்டியில் மனித கழிவை கலந்த குற்றவாளிகளை கைது செய்ய வலியுறுத்தியும் இந்திய குடியரசு கட்சி சார்பில் குடியாத்தம் புதிய பேருந்து நிலையம் அருகே கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

இந்த ஆர்ப்பாட்டத்திற்கு மாவட்ட துணைத் தலைவர் ம.கார்த்திகேயன் தலைமை தாங்கினார். மாவட்ட நிர்வாகிகள் விரேந்தர், சாமுபுஷ்பராஜ், சின்னப்பதாஸ், மணிகண்டன், யுவராஜ், ராஜ்குமார் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

வேலூர் மாவட்ட தலைவர் தலித்குமார் கண்டன ஆர்ப்பாட்டத்தை தொடங்கி வைத்தார். இதில் மாநில துணைத்தலைவர் ஏகாம்பரம், இராணிப்பேட்டை மாவட்ட தலைவர் சிவக்குமார், பெரியார் திராரவிடர் கழக வேலூர் மாவட்ட செயலாளர் ரா.சிவா உள்ளிட்டோர் கண்டன உரையாற்றினார்கள். ஏராளமான நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

### திருவண்ணாமலை ஏடிஎம் கொள்ளை சம்பவத்தில்

# கைது செய்யப்பட்ட 2 குற்றவாளிகள் நீதிமன்றத்தில் ஆஜர்



திருவண்ணாமலை பிப்.19–
ஏடிஎம் கொள்ளை சம்பவத்தில் கைது செய்யப்பட்ட 2 குற்றவாளிகளையும் போலீசார் திருவண்ணாமலை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தினர்.

திருவண்ணாமலையில் 4 ஏடிஎம்களை உடைத்து ரூ75 லட்சம் கொள்ளையடித்த வழக்கில் போலீசார் தனிப்படைகள் அமைத்து தேடி வந்தனர். இந்த நிலையில், இந்த சம்பவம் தொடர்பாக 2 பேரை போலீசார் கைது செய்தனர்.

அரியானாவை சேர்ந்த கொள்ளை கும்பலின் தலைவன் உள்பட 2 பேரை (ஆரிப், ஆசாத்) தனிப்படை போலீசார் கைது செய்தனர். கைது செய்யப்பட்ட இருவரையும் விமானம் மூலம் தனிப்படை போலீசார் தமிழ்நாட்டுக்கு அழைத்து வந்தனர்.

இதனை தொடர்ந்து கைது செய்யப்பட்ட குற்றவாளிகள் 2 பேரையும் போலீசார் திருவண்ணாமலை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தினர்.

# வேலூர் கே.வி.குப்பம் வட்டாரத்தில் ஆட்சியர் தலைமையில் அனைத்து கிராம திட்டங்கள் ஆய்வு



வேலூர், பிப். 19 –
வேலூர் மாவட்டம், கீ.வ.குப்பம் ஊராட்சி ஒன்றியம், நாகல் ஊராட்சியில் கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சி திட்டத்தின் கீழ் ஜடைகுட்டை நீர்நிலை தூர்வாரும் பணி, தரிசு நில மேம்பாட்டு பணி மற்றும் கீ.வ.குப்பம் ஊராட்சி ஒன்றியம், நாகல் ஊராட்சியில் மகாத்மா காந்திதேசிய ஊரகவேலை உறுதி திட்டத்தின் கீழ் ரூ..4.97 லட்சம் மதிப்பில் அமைக்கப்பட்டுள்ள தடுப்பணைகளை மாவட்ட ஆட்சியர் பெ.குமாரவேல் பாண்டியன் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இந்த ஆய்வின்போது குடியாத்தம் வருவாய் கோட்டாட்சியர் வெங்கட்ராமன், வேளாண் இணை இயக்குநர் விஸ்வநாதன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) வெங்கடேசன், உதவி இயக்குநர் தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை அபிலா, வட்டாட்சியர் கீதா, வட்டார வளர்ச்சி அலுவலர் மனோகரன், மக்கள் பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப்பட்ட உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள், பொதுமக்கள் சமூக ஆர்வலர்கள் மற்றும் அரசு துறை சார்ந்த அலுவலர்கள், பணியாளர்கள் உடனிருந்தனர்.

# காரைக்கால் என் பி.சர்வதேச பள்ளியில் பல்வேறு பள்ளிகளுக்கு இடையேயான மாவட்ட அளவிலான கலைப் போட்டிகள்




காரைக்கால் , பிப்,19
காரைக்கால் என் பி.சர்வதேச பள்ளியில் பல்வேறு பள்ளிகளுக்கு இடையேயான மாவட்ட அளவிலான கலைப் போட்டிகள். காரைக்கால் அடுத்த வடமட்டம் எம்பி சர்வதேச பள்ளியில் மாவட்ட அளவிலான கலை போட்டிகள் நடைபெற்றது .

இந்த போட்டியில் காரைக்கால் மாவட்டத்தைச் சேர்ந்த 15-க்கும் அதிகமான பள்ளிகளின் மாணவ மாணவியர் கலந்து கொண்டனர் விழாவிற்கு பள்ளியின் தலைவர் மருத்துவர் முஜிபுர் ரஹ்மான் தலைமை தாங்கினார் பள்ளியின் இயக்குனர் முஹம்மது அலி ஆலோசகர் பேராசிரியர் நஜ்முதீன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

முன்னதாக பள்ளியின் முதல்வர் லிஜி சேகரன் நாயர் வரவேற்றார் பல்வேறு போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகளும் பாராட்டு சான்றிதழ்களும் வழங்கப்பட்டன இதில் காரைக்கால் தெற்கு தொகுதி சட்டமன்ற உறுப்பினர் நாஜிம் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு வழங்கினார். விழாவிற்கான அனைத்து ஏற்பாடுகளையும் என்பி சர்வதேச பள்ளியின் ஆசிரியை ஜானகி உள்ளிட்ட அனைத்து ஆசிரியர்களும் சிறப்பாக செய்திருந்தனர் ஆசிரியை ஷாஜியா நன்றியுரை ஆற்றினார்

# புதுச்சேரி மாநிலத்தில் பிரிப்பேர்டு மின்வெட்டு பொருத்தும் திட்டத்தை ரத்து செய்ய வலியுறுத்தி காரைக்காலில் எஸ்டிபிஐ கட்சி சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம்




காரைக்கால், பிப்,19
புதுச்சேரி மாநிலத்தில் மின் துறையை தனியார் மயமாக்குவதாக அறிவிப்புகள் வெளியாகி பின்னர் டெண்டர்கள் கோரப்பட்டது. இதற்கு கடும் எதிர்ப்பு இருந்து வந்த நிலையிலும் திட்டம் ரத்து செய்யப்படவில்லை.

மின்துறை ஊழியர்கள் உள்ளிட்ட அரசியல் கட்சியினர் பல்வேறு கட்ட போராட்டங்களில் ஈடுபட்டு வந்த நிலையில் இத்திட்டம் நிறுத்தப்படவில்லை. இந்நிலையில் மின்துறை ஊழியர்கள் மின்துறையை தனியார் நயமாக்குவதை நிறுத்த கோரி நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்து உள்ளனர். வழக்கு நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது. இந்நிலையில் புதுச்சேரி மாநிலத்தில் ப்ரீபெய்ட் மின்மீட்டர் திட்டத்தை அமல்படுத்த உள்ளதாக புதுச்சேரி அரசு அறிவித்துள்ளது. இதனை கண்டித்தும், ரத்து செய்ய வலியுறுத்தியும் காரைக்காலில் எஸ்டிபிஐ கட்சி சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. கண்டன ஆர்ப்பாட்டத்தில் எஸ் டி பி ஐ கட்சி மற்றும் பல்வேறு அரசியல் கட்சிகளை சேர்ந்த 100க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டு ப்ரீபெய்டு மின்மீட்டர் திட்டத்திற்கு எதிராக கண்டன முழக்கங்களை எழுப்பினர். போராட்டத்தின் போது செய்தியாளர்களிடம் பேசியஎஸ்டிபிஐகட்சியின் புதுச்சேரி மாநில பொதுச் செயலாளர் சுல்தான் கௌஸ் "புதுச்சேரி அரசு ப்ரீபெய்டு மின் மீட்டர் திட்டத்தை கொண்டுவரும் முன் மக்களிடம் எந்தவித கருத்துக்கேற்பு கூட்டமும் நடத்தாமல் திடீரென அறிவித்துதன்னிச்சையாக செயல்படுவதாக புதுச்சேரி அரசு மீது குற்றம் சாட்டினார். இத்திட்டத்தினால் ஏழை எளிய மக்கள் பாதிக்கப்படுவதோடு விவசாயிகளுக்கும் பண இழப்பு ஏற்படும் எனவும் அவர் தெரிவித்தார். இந்த ப்ரீபெய்ட் மின் மீட்டர் திட்டத்தை எஸ்டிபிஐ கட்சி வன்மையாக கண்டிப்பதாகவும் இத்திட்டத்தை உடனடியாகரத்துசெய்யா விட்டால் மக்களை ஒன்று திரட்டி மாபெரும்தொடர் போராட்டங்களை எஸ்டிபிஐ கட்சி நடத்தும் எனவும்புதுச்சேரி அரசுக்கு அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.



புதுவை மாநிலம் காரைக்கால் மாவட்ட ஆட்சியர் எல் முகமது மன்சூர் தலைமையில் போதை பொருட்களை ஒழிப்பது சம்பந்தமாக ஆலோசனை கூட்டம் நடைபெற்றது. இதன் தொடர்ச்சியாக காரைக்கால் மாவட்ட கல்வித்துறை மற்றும் புதுவாழ்வு மது போதை மறுவாழ்வு மையம் இணைந்து கோட்டுச்சேரி வ.உ.சி. அரசு மேல்நிலைப் பள்ளியில் போதைப் பொருட்களின் தீமைகள் குறித்து மாணவர்களுக்கான விழப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது, இந்நிகழ்ச்சிக்கு மேல்நிலை பள்ளி துணை இயக்குனர் ராஜேஸ்வரி தலைமை ஏற்று நிகழ்ச்சியின் முக்கியத்துவம் குறித்தும் போதைப் பொருட்களின் தீமைகள் குறித்தும் மாணவாகளுக்கு எடுத்துரைத்தார்கள். மேலும் மாணவர்கள் போதைப் பழக்கத்திற்கு சிறிதளவும் அடிமையாக கூடாது என்றும் படிப்பு ஒன்றை குறிக்கோளாகவைத்து வாழ்வில் முன்னேற வேண்டும் என்றும் மாணவர்களுக்கு எடுத்துரைத்தார்கள். அடுத்ததாக குழந்தைகள் நலகுழமத்தின் தலைவர் (வழக்கறிஞர்) சங்கரி குழந்தைகள் நலத்தின் செயல்பாடுகள் பற்றி போசினார்கள் புவனேஸ்வரி மற்றும் மலர்விழி குழந்தைகள் நல குழமத்தின் உறுப்பிர்கள் வளர் இளம் பருவத்தினற்கு ஏற்படும் பிறச்சனைக்களுக்கு ஆலோசனைகளை வழங்கினர், போதைப் பொருளின் பாதிப்புகள் குறித்து விழிப்புணர்வை புதுவாழ்வு மைய பொறுப்பாளர் மகேஸ்வரி மாணவர்களுக்கு விழிப்புணர் பிரச்சாரத்தை வழங்கினார்கள். இருதியில் பள்ளி துனை முதல்வர் கனகராஜ் போதைப் பொருளின் தீமைகள் குறித்து மாணவர்களுக்கு எடுத்துரைத்தார்கள், மேலும் விழாவை சிறப்பான முறையில் ஏற்பாடு செய்திருந்தார்கள்.



# மதுரையில் நாட்டு மக்கள் நலனுக்காக பிரார்த்தனை செய்தேன்

# ஏடிஎம் கொள்ளை சம்பவம் முதன்மை குற்றவாளிகள் சிறையில் அடைப்பு







# மோசடி பத்திரப்பதிவு தமிழக அரசுக்கு நீதிமன்றம் பாராட்டு


| சென்னை / புதுக்கோட்டை | 19.02.2023 | varalaruu.com | பக்கம்:5 | ரூ.10 |
|---|---|---|---|---|

புதுகை
வரலாறு
நாளிதழ்

# வரலாற்றில் இன்று



## இன்றைய பிறந்த நாள்

**சிவாஜி**, மராட்டியப் பேரரசர் (பி.1630) (இ.1680)



**உ. வே. சாமிநாதையர்**, தமிழறிஞர் (பி.1855) (இ.1942)



**பியான்ட் சிங்**, இந்திய அரசியல்வாதி, பஞ்சாப் முன்னாள் முதலமைச்சர் (பி.1922) (இ.1995)



**கே. விஸ்வநாத்**, இந்திய நடிகர், இயக்குநர் (பி.1930) (இ.2023)




## இன்றைய நினைவு நாள்

**கோபால கிருஷ்ண கோகலே**, இந்திய மெய்யியலாளர், விடுதலைப் போராட்ட செயற்பாட்டாளர் (பி.1886) (இ.1915)



**ஜி. நாகராஜன்**, தமிழகச் சிறுகதை எழுத்தாளர் (பி.1929) (இ.1981)



**பேரரசர் சிவாஜி ஜெயந்தி (மகாராட்டிரம்)**